# 02 பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக, பொருளாதார மாற்றங்கள்

இதற்கு முன்னைய அத்தியாயத்தில் கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானியரின் ஆட்சி நிலைநிறுத்தப்பட்டதிலிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்தது வரை பிரித்தானியர் இங்கு மேற்கொண்ட நிர்வாக முறையைக் கற்றது உங்களுக்கு நினைவிருக்கலாம். அக்காலகட்டத்தினுள் பிரதானமாக இலங்கையின் பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட விருத்தியைத் தொடர்ந்து அரசியல், சமூக, சமய, கலாசாரத் துறைகளில் பல்வேறு விரிவான மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றைப் பற்றிக் கலந்துரையாடுதலே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த பதினாறாம் நூற்றாண்டளவிலும் இலங்கையில் எமக்கென்ற பாரம்பரிய பொருளாதார முறைமை இருந்துவந்தது. ஆரியர்கள் இலங்கையில் குடியேறிய கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் இருந்து ஆரம்பித்த இலங்கையின் சமூக, பொருளாதார முறை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அத்தோடு வெளிநாட்டு வியாபாரமும் இடம்பெற்று வந்தது. அப்போது அரசின் பிரதான வருமான மூலமாக இருந்தது நிலமாகும். அரசனுக்குத் தேவையான சேவைகளை வழங்கி, அதற்குப் பிரதியுபகாரமாக மக்கள் நில உரிமையை அனுபவித்தார்கள். பரந்துபட்ட வியாபாரமோ பணப் புழக்கமோ காணப்படவில்லை. உள்நாட்டு வியாபாரம் பொருட்களைப் பண்டமாற்றுச் செய்வதன் மூலம் நடைபெற்றது சாதி முறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறை நிலவியது. வெவ்வேறு சாதியைச் சேர்ந்தவர்கள் அவரவர்களுக்கான உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு பண்டமாற்றுமூலம் தத்தமது தேவைகளைப் பூர்த்திசெய்துகொண்டனர். அதற்கமைய தன்னிறைவான வாழ்க்கையை அவர்கள் நடத்தி வந்தனர். பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரின் வருகையின்போது இராஜகாரியமுறை, சாதிமுறை, நிலத்தை அடிப்படையாகக் கொண்ட சுயதேவைப் பூர்த்தியடைந்த பொருளாதார முறை என்பன இலங்கையில் காணப்பட்டன.

பதினாறாம் நூற்றாண்டளவில் இலங்கை ஐரோப்பியரின் ஆதிக்கத்திற்குட்பட்டது. ஆரம்பத்தில் இலங்கையில் போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டனர். ஏறத்தாள நூற்றைம்பது ஆண்டுகளாக கரையோரப் பிரதேசங்களை அவர்கள் ஆட்சி செய்ததன் விளைவாக எமக்கென்றிருந்த பொருளாதார முறைமை படிப்படியாக மாற்றமுறத் தொடங்கியது. போர்த்துக்கேயரின் புதிய நிர்வாக முறையில் வர்த்தகத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமையால் இலங்கையின் விவசாயம் காலப்போக்கில் முடங்கிப் போனது. இதனால் இந்நாட்டிற்குத் தேவையான அரிசி பெருமளவில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதனால் இலங்கையில் நிலவிவந்த சுயதேவைப்பூர்த்திப் பொருளாதார முறை வீழ்ச்சியுற்றது.

அத்தோடு ஒல்லாந்தரால் ஆரம்பிக்கப்பட்ட சிறு கைத்தொழில்களால், அதற்கு சேவை வழங்கும் தொழிலாளர் வர்க்கம் ஒன்று தோன்றியது. இதனால் இதுவரை நிலவி வந்த கட்டாய இராஜகாரிய முறைக்குப் பதிலாக சம்பளத்திற்கு உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் ஒன்று உருவானது. இதன்படி கரையோரப் பிரதேசத்தில் ஒல்லாந்தரின் கீழும் சுயதேவைப் பூர்த்திப் பொருளாதார முறை மாற்றமுற்று புதிய பொருளாதார முறை ஒன்றுக்கான அடிப்படைகள் உருவாகத் தொடங்கின.

ஒல்லாந்தரால் இலங்கையில் முதன்முறையாக முறையான வர்த்தகப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் தோட்டங்களில் கறுவாப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டபோதிலும் அது தோல்வியுற்றது. அதே வேளையில் கோப்பி, மிளகு, கராம்பு என்பவற்றைப் பயிரிட உதவி புரிந்ததுடன் கரும்பு, தெங்கு என்பவற்றையும் பயிரிட்டனர். பொருளாதார நடவடிக்கைகளில் போர்த்துக்கேயரைப் போன்றே ஒல்லாந்தரும் இதுவரை இலங்கையில் நிலவிவந்த கட்டாய இராஜகாரிய முறையைப் பயன்படுத்தி தம்முடைய பொருளாதார நடவடிக்கைகளுக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக்கொண்டனர்.

முழு இலங்கையையும் தமதாக்கிக் கொண்ட ஆங்கிலேயர், 1833 இன் பின்னர் இந்நாட்டில் செயற்படுத்திய மாற்றங்களின் விளைவாக பொருளாதார முறையில் பெருமாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. உணவை உற்பத்தி செய்துகொள்ளும் விவசாய நடவடிக்கைக்குப் பதிலாக வர்த்தகப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தனர். ஆங்கிலேயரின் கீழ் பெருந்தோட்டச் செய்கை இலங்கைப் பொருளாதாரத்தின் பெருஞ்சக்தியானது. அத்தோடு இலங்கையின் சமூக, பொருளாதார நடவடிக்கைகளில் மாற்றங்கள் பலவற்றிற்கு வழிகோலியது.

## இராஜகாரியமுறையை ஒழித்தல்

இலங்கையின் தேசிய, சமூக, பொருளாதார, அரசியல் முறையின் அடிப்படையாக இருந்த இராஜகாரிய முறை

- நிலத்தை அனுபவிக்கும் இராஜகாரியமுறை,
- கட்டாய சேவை இராஜகாரிய முறை என இரு வகைப்படும்.

நிலத்தை அனுபவிக்கும் இராஜகாரிய முறைக்கு ஏற்ப, நாட்டில் உள்ள எல்லா நிலமும் அரசனுக்குச் சொந்தமானதாகும். அரசனின் பிரதான வருமான வழி அந்நிலங்களில் இருந்து கிடைக்கப்பெறும் வருமானமேயாகும். நாட்டை நிர்வகிப்பதற்குத் தேவையான பல்வேறுபட்ட சேவைகளை வழங்குவதற்காகப் பணம் கொடுக்கப்படுவதில்லை. அரசன் தனக்குத் தேவையான சேவையை வழங்கும் அதிகாரிகளுக்கு நிலத்தை வழங்கினான். அவ்வாறு வழங்கப்பட்ட காணிகள் “சேவாபறவேனி” என்று குறிப்பிடப்பட்டது. அந்நிலத்தை அனுபவிப்பவர்கள் அதற்குப் பதிலாக அரசனுக்குப் பல்வேறு சேவைகளை வழங்கினர். நிலத்தைப் பெற்றுக்கொண்ட அதிகாரிகள் அவற்றைப் பயிரிடுவதற்காக

மக்களிடையே பகிர்ந்தளித்தனர். அவ்விடங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொண்ட மக்கள் தாம் பயன்படுத்திய நிலத்தின் உரிமையாளர்களான அரசனுக்கோ, அதிகாரிகளுக்கோ பல்வேறு வரிகளை வழங்கினர். இது நிலத்தைப் பயன்படுத்தும் இராஜகாரிய முறை என வழங்கப்பட்டது.

இராஜகாரிய முறையின் அடுத்த பிரிவு கட்டாயசேவை இராஜகாரிய-முறையாகும். இதன்படி நாட்டிலுள்ள வயது வந்த ஆண்கள் அனைவரும் ஆண்டொன்றில் குறிப்பிட்ட நாட்களுக்கு அரசுக்கு இலவசமாக சேவையை வழங்கவேண்டியிருந்தது. கிராம சபைகளினதும் கிராமத் தலைவர்களினதும் கீழ் இப்பணிகள் ஆற்றப்பட்டதோடு அவர்கள் வாழ்ந்த கிராமங்களில் குளங்கள், சிறுஅணைக்கட்டுகள், கால்வாய்கள், பாதைகள் என்பவற்றைப் புனரமைத்தல் போன்ற பொது விடயங்களுக்கு இச்சேவைகளை வழங்கினர்.

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தங்களுடைய நிர்வாகப் பிரதேசங்களில் ஆற்றப்பட வேண்டிய சேவைகளுக்கான உழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக கட்டாய சேவை இராஜகாரிய முறையைப் பயன்படுத்திக்கொண்டனர். என்றாலும் இம்முறையில் மாற்றமொன்றைச் செய்வதற்கான முதலாவது முயற்சி 1796 இல் கரையோரத்தைக் கைப்பற்றிக்கொண்ட ஆங்கிலேய ஆட்சியாளரால் மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் பொதுமக்களை சேவையாகவோ, பொருளாகவோ வரிகளை செலுத்துவதற்குப் பதிலாக பணமாகச் செலுத்தக் கட்டாயப்படுத்தினர். நீங்கள் முன்னுள்ள அத்தியாயத்தைக் கற்கும் போது 1797 இல் கரையோரப் பிரதேசத்தில் ஆங்கிலேயருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததற்குப் பிரதான காரணம் அவ்வரி ஏற்பாடேயாகும் எனத் தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

## ஆளுனர் நோர்த்தின் கீழ் கட்டாய சேவை இராஜகாரியமுறையை ஒழித்தல்

இலங்கையில் நீண்டகாலமாக அமுலில் இருந்த இராஜகாரிய முறையை நீக்கிக் கொள்வதற்கான முறையான முதல் முயற்சியை மேற்கொண்டவர் நோர்த் ஆளுநராவார். அதற்காக அவர் தெரிவித்த காரணங்கள் வருமாறு :

01. சுதேச அதிகாரிகள் பொதுமக்களின் உழைப்பைச் சுரண்டித் தனிப்பட்ட தேவைக்காக அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுதல்.

02. இலவசமாகப் பெற்ற இச்சேவைமுறை சுதந்திரமான மனிதர்களுக்குப் பொருந்தாத அடிமை முறைபோல் தென்படல்.

03. நாட்டின் அபிவிருத்திக்காக உழைப்பைப் பெற்றுக்கொள்வதற்குத் தடையாக இருந்தமை.

1801 - 1803 காலகட்டத்துள் மூன்று சட்டங்களைப் பிறப்பித்து, அவற்றின் மூலம் இராஜகாரிய முறையை அவர் ஒழித்தார்.

இராஜகாரிய முறைக்குப் பதிலாக காணிகளை அனுபவிப்பதற்கு அரசாங்கத்திற்கு வரி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் பெறப்படும் சேவைக்குப் பதிலாக சம்பளம் ஒன்றை வழங்குவதற்கும் அவர் வழிவகைகளை வகுத்தார்.


பிரட்ரிக் நோர்த்
படம் 2.1

இராஜகாரிய முறையை நீக்குவதன் மூலம் நோர்த் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. அதேபோன்று வரியின் மூலம் பெற்றுக்கொண்ட தொகையை விட அதிகமாக சம்பளமாகக் கொடுக்க வேண்டியு-மிருந்தது. பொது சேவைகளுக்குத் தேவையான உழைப்பைப் பெற்றுக் கொள்வதும் இதனால் கஷ்டமாக இருந்தது. பணப் புழக்கமோ பணத்தின் தேவையோ இல்லாத சுயதேவைப் பூர்த்தி வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டிருந்த இலங்கை மக்களுக்கு பணத்தின் பெறுமதி தெரியவில்லை. இதனால் இராஜகாரிய முறையை இல்லாமற் செய்து பணத்திற்குச் சேவையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் பெரும் இலாபம் ஈட்டலாம் என்ற நோர்த்தின் எதிர்பார்ப்பு தோல்வியில் முடிவடைந்தது.

## ஆளுனர் தோமஸ் மெயிட்லண்டின் கீழ் மீண்டும் இராஜகாரிய முறையைக் கொண்டுவருதல்.

1805 இல் நோர்த்தை அடுத்து தோமஸ் மெயிட்லன்ட் ஆளுனரானார். இராஜகாரிய முறையை நீக்கிய நோர்த்தின் செயற்பாட்டை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. தேவைப்படும் உழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் இராஜகாரிய முறையை மீளவும் ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்தார்.

என்றாலும் அவர் நிலத்தினை அனுபவிக்கும் இராஜகாரிய முறையை மீளவும் ஏற்படுத்தவில்லை. அரசாங்கத்திற்கு சேவை புரிவதற்காகப் சம்பளத்தை பணமாக வழங்கவும் நிலத்தைப் பயன்படுத்துவதற்காக விளைச்சலின் ஒரு பகுதியை வரியாகச் செலுத்துவதற்கும் நோர்த்தால் விதிக்கப்பட்டிருந்த கட்டளைகளை இவரும் தொடர்ந்து செயற்படுத்தினார்.

1818இல் பிறப்பிக்கப்பட்ட ‘மலையகப் பிரகடனம்’ மூலம் கண்டி இராச்சியத்திற்குச் சொந்தமாயிருந்த முழுப் பிரதேசத்தையும் தமதாக்கிக் கொண்டதன் பின்னர் அப்பிரதேசங்களிலும் நிலத்தைப் பயன்படுத்துவதற்கான இராஜகாரிய முறையை நீக்கிவிட்டு நிலத்திற்கு வரி அறவிடும் முறையையும் அரசாங்கத்திற்கு பணிபுரிவதற்கு சம்பளம் வழங்கும் முறையையும் பிரித்தானியர் ஆரம்பித்தனர்.

## கோல்புறூக் கமரன் யாப்பின் கீழ் மீண்டும் கட்டாய சேவை இராஜகாரிய முறைமை ஒழிக்கப்படல்

இலங்கையில் எதிர்பார்த்த வருமானைத்தை ஈட்டிக்கொள்ள பிரித்தானியரால் இயலாமற்போனது. அரசாங்கத்தை நடத்துவதற்குத் தேவையான பணத்தை பிரித்தானிய அரசாங்கம் திறைச்சேரியிலிருந்து வருடாந்தம் பெறவேண்டிய நிலையில் இருந்தது. அதேபோன்று பெருந்தோட்டச் செய்கைக்குத் தேவையான ஊழியத்தைப் பெற்றுக் கொள்வதிலும் சிக்கல் ஏற்பட்டது. இக்காரணங்களினால் அரசு எதிர்நோக்கிய வரவு-செலவுப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்து ஆலோசனைகளை முன்வைப்பதற்காக 1829 ஏப்ரல் மாதத்தில் கோல்புறூக் ஆணைக் குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

இலங்கையில் காணப்பட்ட நிலத்தை அனுபவிக்கும் கட்டாய இராஜகாரிய முறை, மலைநாட்டிலும் தாழ்நாட்டிலும், நடைமுறையில் இருந்த பல்வேறு விவசாய, வரி முறைகள், வெளிநாட்டவர்களுக்கு நிலத்தை சொந்தமாக்கிக் கொள்வதற்கு இருந்த தடைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பு கோல்புறூக்கிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இலங்கையில் பல்வேறு பிரதேசங்களிலும் பயணஞ் செய்து விவரங்களைச் சேகரித்த கோல்புறூக் நாட்டின் பொருளாதாரம் ஆட்சிமுறை ஆகியன சார்ந்த இரு அறிக்கைகளையும் கட்டாய சேவை இராஜகாரிய முறை தொடர்பாக இரகசியமான அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தார். பாரிஸ்டரான சார்ள்ஸ் எச். கமரன் நாட்டின் நீதி முறைமை சார்ந்த சீர்திருத்தங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

இதன்படி கட்டாய இராஜகாரிய முறை நீக்கப்பட வேண்டும் என்று கோல்புறூக் ஆலோசித்தது, தனிப்பட்ட முயற்சியாளர்களுக்குத் தடைகளின்றி தேவைப்படும் ஊழியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகும். என்றாலும் அதில் அவர் கவனஞ்செலுத்தியதற்கு இன்னுமொரு காரணமும் இருந்தது. அது கட்டாயசேவை இராஜகாரிய முறையைக் காரணமாக வைத்துக் கொண்டு பொதுமக்களுக்குப் பல்வேறு துன்பங்கள் இழைக்கப்படுவதை ஒழிக்க வேண்டும் என்பதாகும். தாம் வாழும் இடங்களிலிருந்து தொலைவில் பாதைகள் அமைத்தல் போன்ற கடினமான வேலைகளைச் செய்வதற்கு நேரிட்டதோடு, இதனால் கிராமிய மக்களின் விவசாய நடவடிக்கைகள் பாதிப்புற்றன. இதனால் ஏராளமானோர் இராஜகாரிய செயற்பாடுகளில் இருந்து விடுபட்டு பதுங்கி ஒளிந்து வாழ்ந்ததனால், அவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கி, அவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை கிராமத்தலைவர்களுக்கு ஏற்பட்டது. அந்நிலையில் இது கோல்புறூக்கினால் மிருகத்தனமான முறையாகக் கருதப்பட்டு கட்டாய இராஜகாரிய முறை நீக்கப்பட வேண்டும் என அவர் ஆலோசனை வழங்கினார். **இதன்படி நீண்ட காலமாக இலங்கையில் நடைமுறையில் இருந்த கட்டாய சேவை இராஜகாரிய முறை 1833 இல் நீக்கப்பட்டது.**


**செயற்பாடு**

1. கட்டாய சேவை இராஜகாரிய முறை என்றால் என்னவென்று தெளிவுபடுத்துக.
2. கோல்புறூக் கட்டாய சேவை இராஜகாரிய முறையை நீக்கியமைக்கான காரணங்கள் யாவை ?

## பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் ஆரம்பமும் பரம்பலும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் நீர்வளநாகரிகம் அழிவுற்று, தென்மேற்கை நோக்கிய குடிப்பெயர்வுடன் இலங்கையில் நிலவிய விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட பொருளாதாரம் மாற்றமுற்று, வியாபாரத்துடன் சம்பந்தப்பட்ட பொருளாதார முறை ஒன்று உருவாகத் தொடங்கியது. இதில் விவசாய ஏற்றுமதிகளான கறுவா முக்கியத்துவமடைந்தது. இலங்கையின் கரையோரப் பிரதேசத்திலும் மலைநாட்டிலும் இயற்கையாக விளைந்த பயிரான கறுவாவின் வியாபாரம் அரசின் ஏகபோக உரிமையாக இருந்தது. வெளிநாட்டவர்கள் பலரும் கறுவாவைப் பெற எமது நாட்டிற்கு வந்தனர். பதினாறாம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயரும் கரையோரப் பிரதேசத்தின் கறுவா வியாபாரத்தைத் தமது ஏகபோக உரிமையாகக் கொண்டனர். இதனால் பெருந்தொகையான இலாபத்தை அனுபவித்தனர். அவர்களை அடுத்து இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றிக் கொண்ட ஒல்லாந்தரும் கறுவா வர்த்தகத்தின் ஏகபோகத்தைத் தமதாக்கிக் கொண்டு அதன் மூலம் தமது வருமானத்தைப் பெருக்கிக்கொண்டனர்.

ஆரம்ப காலத்தில் போர்த்துக்கேயரைப் போலவே ஒல்லாந்தரும் வர்த்தகப் பயிர்களைச் செய்கைபண்ணும் கொள்கையை மேற்கொள்ளவில்லை. காடுகளில் இயற்கையாக விளைந்த கறுவாவை தோட்டங்களில் பயிரிட ஆரம்பித்தவர்கள் ஒல்லாந்தரே ஆவர். ஆரம்பத்தில் கறுவாவும் பின்னர் கோப்பி, மிளகு என்பவற்றையும் பயிரிடத் தொடங்கினர். இன்றைய கொழும்பு, கறுவாத்தோட்டம், கதிரான, எவரிவத்த போன்ற பிரதேசங்களில் ஒல்லாந்தரால் கறுவாச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு ஒல்லாந்தரால் முதன் முறையாக இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கான அத்திவாரம் இடப்பட்டது.



கறுவா சிப்பம் கட்டுதல்
படம் 2.2

ஒல்லாந்தரிடமிருந்து கரையோரத்தைக் கைப்பற்றிய ஆங்கிலேயர், ஆரம்பத்தில் இருந்தே தமது பொருளாதார நடவடிக்கையை மேம்படுத்திக் கொள்வதற்காக, கறுவா உட்பட பல்வேறு வர்த்தகப் பொருட்களைப் பயிரிட ஆரம்பித்தனர்.

பிரித்தானிய அரசாங்கம் தோட்டப் பயிர்ச்செய்கையை விருத்தி செய்வதற்காக நிலத்தைப் பெற்றுக் கொடுப்பதையும் வரிச்சலுகைகளை வழங்குவதையும் தமது கொள்கையாகக் கொண்டியங்கியது என்றாலும் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்குத் தோட்டச் செய்கை விருத்தியடையவில்லை. கறுவா வியாபாரத்திலும் அவர்கள் எதிர்பார்த்த வருமானத்தை ஈட்டிக்கொள்ள இயலவில்லை.

### கறுவாச் செய்கை முடக்கமடைந்தமைக்கான காரணங்கள்.

- இந்தியா, ஜாவா போன்ற இடங்களிலிருந்து லண்டன் சந்தைக்கு அதிகரித்த கறுவா நிரம்பல் செய்யப்பட்டமை.
- கறுவாவுக்குப் பதிலாகப் பயன்படுத்தத்தக்க கெஸியா (cassia) என்னும் பொருளை தென் இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன்ஸ் தீவுகள், தென்சீனா என்னும் பிரதேசங்களிலிருந்து இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.
- கெஸியாவின் விலை குறைவானபடியால் அதிகமாகவே அதனைப் பயன்படுத்தத் தொடங்கியமை.

❖ இலங்கையிலிருந்து ஏற்றமதி செய்யப்பட்ட ஒவ்வொரு இறாத்தல் கறுவாவிற்கும் தீர்வையாக மூன்று சிலிங் செலுத்தப்பட வேண்டி இருக்கையில், ஏனைய நாடுகளில் இத்தொகை இதனைவிடக் குறைவாகக் காணப்பட்டமை.

❖ லண்டன் சந்தையில் கறுவாவின் நிரம்பல் அதிகரித்தமையால், இலங்கைக் கறுவாவின் விலை வீழ்ச்சியடையத் தொடங்கியமை.

## பெருந்தோட்டச் செய்கையின் விருத்திக்குப் பங்களித்த காரணிகள்

1830வரை பிரித்தானிய அரசாங்கம் எவ்வளவு சலுகைகளை வழங்கியபோதிலும் தோட்டச் செய்கையை விருத்தியடையச் செய்ய இயலவில்லை. அது வேகமாகப் பரவலடையத் தொடங்கியது 1835 அளவிலேயாகும். இவ்வாறு அது பரவலடைந்தமைக்கான காரணிகள் பலவாகும். கோல்புறூக் குழுவினரின் சிபார்சுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே அவற்றில் பிரதானமானவையாகும்.

1829 ஆம் ஆண்டு கோல்புறூக் ஆணைக்குழு இலங்கைக்கு வந்தமைக்கான காரணம், பிரித்தானிய அரசாங்கத்திற்கு இலங்கையில் கிடைக்கும் வருமானத்தை விடப் பெருந்தொகையான பணம் அதனை நிர்வகிக்கச் செலவாவதால் ஏற்பட்ட வரவு-செலவுப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான நடவடிக்கைகளைக் கண்டறிந்து ஆலோசனைகளை முன்வைப்பதற்காகும்.

இது தொடர்பாகப் பரிசீலித்த கோல்புறூக், அக்காலத்தில் நாட்டின் பொருளாதார முறையின் முக்கியமான பலவீனம், அரசாங்கத்தின் வசமுள்ள வர்த்தக ஏகபோக உரிமையே எனக்கருதினார். எந்த இடைஞ்சலுமின்றி பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என அவர் ஆலோசனைகளை முன்வைத்தார்.

அக்காலத்தில் நிலவிய வரிமுறை பொது மக்களுக்குப் பேரிடர் விளைவிப்பதாயும் மூலதனமிட விரும்பும் முதலீட்டாளர்களுக்குத் தடையாக அமைவதாகவும் சுட்டிக்காட்டிய கோல்புறூக், நடைமுறையிலிருந்த வரிமுறையை மறுசீரமைக்க விரும்பினார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக கோல்புறூக் முன் வைத்த சிபார்சுகளின்படி 1833 இல் செயற்படுத்தப்பட்ட நடைமுறைகள் பெருந் தோட்டப்பயிர்ச்செய்கையின் விருத்தியில் கூடிய பங்களிப்பைச் செய்தது.

## அவ்வாறான முக்கிய சிபார்சுகள் வருமாறு

01. ஐரோப்பியர்களுக்கு இந்நாட்டில் தங்கியிருப்பதற்கும் நிலத்தை உடமையாக்கிக் கொள்வதற்கும் இருந்த வரையறைகளை இல்லாமலாக்குதல்.

02. உள்நாட்டு, வெளிநாட்டு முயற்சியாளர்களுக்கு தேவையான மட்டும் நிலத்தை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பான கொள்கை ஒன்றை நடைமுறைப்படுத்தல்.

03. ஆளுநரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு சட்ட, நிர்வாகத் துறைகளுக்கு இரண்டு சபைகளை அமைத்தல்.

சட்ட, நிர்வாக, நீதித் துறைகளில் வரையறையற்ற அதிகாரங்களைக் கொண்டிருந்த ஆளுநருக்கு வேண்டிய நபர்களை நாடுகடத்தவும் விசாரணையின்றி சிறைப்படுத்தி வைக்கவும் கூடிய விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறான ஆளுநர் ஒருவரின் கீழ் தமது மூலதனத்தை முடக்குவதற்கு ஐரோப்பிய முயற்சியாளர்கள் முன்வரமாட்டார்கள் என்று கோல்புறூக் சுட்டிக்காட்டினார். ஆகையால் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இந்நாட்டில் தங்கியிருப்பதற்கும் முதலீட்டை மேற்கொள்வதை ஊக்குவிப்பதற்கும் தாராண்மைவாத (Liberalism) ஆட்சி முறை ஒன்றை உருவாக்குவதற்காக சட்டவாக்கக் கழகத்தையும் நிர்வாகக் கழகத்தையும் உருவாக்கினார்.

04. முயற்சியாளர்களுக்குத் தடையின்றி ஊழியரைப் பெற்றுக் கொள்வதற்காக கட்டாய சேவை இராஜகாரிய முறையை இல்லாதொழித்தார்.

05 கட்டாய சேவை இராஜகாரியமுறை ஊழிய நகர்ச்சிக்குத் தடையாக இருப்பதினால், தோட்டத்துறைக்கான ஊழியரைத் திரட்டிக் கொள்வதற்கு தனியார் துறையினருக்குள்ள இடைஞ்சலைப் போக்குவதே இதன் எதிர்பார்ப்பாகும்.

06. நிர்வாகச் செலவுகளைக் குறைத்துக்கொள்வதற்காக, இதுவரை குடியியற் (சிவில்) சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகள் சிலவற்றை நீக்கியதன் மூலம், அவர்களுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடு செய்து-கொள்வதற்காக, தனியார்துறை முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது. இவ்வாறு செய்தமையால், அவர்கள் தமது அதிகாரத்தை, பெருந்தோட்டத்துறையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இவ்வாறு 1833 இலிருந்து மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களால், தனியார் முயற்சியாண்மையாளர்களுக்குத் தமது மூலதனத்தை முதலிடுவதற்கு இருந்த தடைகள் பெருமளவுக்கு நீக்கப்பட்டமையால் துரிதமுன்னேற்றம் ஏற்பட ஆரம்பித்தது.

## கோப்பிச் செய்கையின் பரம்பல்

பிரித்தானியர்கள் 1804 ஆம் ஆண்டிலிருந்தே கோப்பிப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அப்படியிருந்தாலும் சுதேசிகளிடம் பெருந்தோட்டச் செய்கைகளுக்கான பணம் இல்லாதிருந்தமையாலும் ஐரோப்பியர்களுக்கு கொழும்பு மாவட்டத்திலல்லாது காணிகளைக் கொள்வனவு செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தமையாலும் கரையோரப் பிரதேசம் கோப்பிப் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமற்றபடியாலும், அம்முயற்சி அவ்வளவு தூரம் வெற்றியளிக்கவில்லை.

1815ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியமையால் கோப்பிச் செய்கைக்கு மிகவும் பொருத்தமான பிரதேசம் அவர்களின் கைவரப்பெற்றமை கோப்பிச் செய்கையின் பரம்பலுக்குப் பங்களித்தமுக்கியமான காரணியாகும்.

- முதன்முறையாக 1822 இல் ஜோர்ஜ் பேர்ட் என்பவர் கம்பளையில் சிங்ஹபிட்டி என்னும் இடத்தில் கோப்பித் தோட்டம் ஒன்றை ஆரம்பித்தார்.
- 1824 இல் எர்ட்வட் பாண்ஸ் ஆளுநரால் கன்னொறுவையில் தனியார் கோப்பித் தோட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.
- அவர்களைப் பின்பற்றி அரசாங்க நிர்வாகிகளும் கோப்பியைப் பயிரிட ஆரம்பித்தனர்.
- கோப்பிச் செய்கைக்கு அரசாங்கத்தின் உதவி கிடைக்கப்பெற்றது. ஆளுநர் பாண்ஸ் 1825இல் கோப்பிக்கு விதிக்கப்பட்டிருந்த தீர்வையை அகற்றினார். அத்தோடு வர்த்தகப் பயிர்களுக்கான தீர்வையைப் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு இடைநிறுத்தினார். அவ்வாறே தோட்டச்செய்கையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு, கட்டாய இராஜகாரிய சேவையில் இருந்து விலக்களித்தார். ஆளுநர் பாண்ஸ் கோப்பிச் செய்கையாளர்களுக்காக இலவசமாக காட்டு நிலங்களையும் வழங்கினார்.
- 1830 ஆம் ஆண்டளவில் காலிமாவட்டத்தில் உடுகமப் பகுதியிலும், தும்பறைப் பள்ளத்தாக்கிலும், கம்பளை, பேராதனை பிரதேசங்களைச் சூழவும் கோப்பித் தோட்டங்கள் பரவிக் கொண்டிருந்தன.

1837 இன் பின்னர் கோப்பிச் செய்கை மிகவும் வெற்றியளித்ததோடு, அரசாங்க அதிகாரிகளும் வெளிநாட்டவர்களும் கோப்பிச் செய்கையை ஆரம்பித்தனர். சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிச் செய்கை 1840 ஆம் ஆண்டளவில் மலைநாட்டின் பெரும் பிரதேசங்களைத் தனதாக்கிக் கொண்டிருந்தது.

கோப்பிப் பயிர்ச்செய்கை பரவலடைந்ததைத் தொடர்ந்து அதற்குத் தேவையான நிலத்துக்குப்பற்றாக்குறை ஏற்பட்டது. ஐரோப்பிய பயிர்ச் செய்கைக்கு காணியைப் பெற்றுக் கொடுப்பதற்கு 1840 ஆம் ஆண்டில் 12 ஆம் இலக்கத் தரிசு நிலச்சட்டத்தைப் பிறப்பித்து, மலைநாட்டு காணிகளை அரசுடைமையாக்கி, மிகக் குறைந்த விலைக்கு ஐரோப்பியருக்கு விற்பதற்குத் திட்டங்களை வகுத்ததன் மூலம் மலைநாட்டு மக்களுக்குச் சொந்தமான காணிகள் கூட பயிர்ச் செய்கையாளர்களான வெளிநாட்டவருக்கு விற்கப்பட்டது.

## கோப்பிப் பயிர்ச்செய்கை வெற்றி பெற்றதற்கான காரணங்கள்

- ❖ 1833இல் கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் தோட்டங்களைப் பெற்றுக்கொடுத்தமையும் வெளிநாட்டு மூலதனத்தைக் தருவிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்தியமையும்.
- ❖ இங்கிலாந்திற்கு கோப்பியை ஏற்றுமதி செய்யும்போது விதிக்கப்பட்டிருந்த தீர்வையை 1833ஆம் ஆண்டளவில் குறைத்தமை.
- ❖ அடிமை முறையை இல்லாதொழித்தமையால் மேற்கிந்தியத் தீவுகளின் கோப்பிச்செய்கை வீழ்ச்சியுற்றது அதனால் ஐரோப்பியச் சந்தைகளில் எமது கோப்பிக்கான போட்டி குறைந்தமை.
- ❖ மேற்கிந்தியத் தீவுகளில் கோப்பிச் செய்கை வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து அங்கிருந்த முயற்சியாளர்கள் இங்கு வந்து கோப்பித் தோட்டங்களில் முதலீடு செய்தமை.
- ❖ இலங்கையில் 1837 அளவில் மேற்கு இந்தியத் தீவுகள் போன்று குறைந்த செலவில் உயர்ந்ததர கோப்பியை உற்பத்தி செய்யமுடிந்தமை.
- ❖ பெல்ஜியத்திலும் பிரான்சிலும் மக்கள் மத்தியில் கோப்பி ஜனரஞ்சக மானமையால் அதற்கான கேள்வி அதிகரித்தமை.
- ❖ மேற்கு இந்தியத் தீவுகளின் முறைகளைக் கையாண்டு பொருத்தமான பயிர்ச்செய்கை முறையை மேற்கொண்டமை.

  உதாரணமாக : ஆர். பீ. பட்லர் என்பவர் மேற்கு இந்திய தீவுகளின் பயிர்ச்செய்கை முறையைக் கற்று வந்து அவரது தோட்டத்தில் அம்முறையைப் பிரயோகித்தமை.
- ❖ அதிக இலாபம் கிடைத்தமை.

  உதாரணம் :- தென்னிந்தியாவிலிருந்து மலிவான ஊழியம் பெறப்பட்டமை.
- ❖ கொழும்புடன் மற்றைய பிரதேசங்களுக்கான பாதைகள் உருவானமை. ஆளுநர் எட்வட் பான்ஸின் காலத்தில் கொழும்புத் துறைமுகத்துக்கும் பெருந்தோட்டங்களுக்கும் பாதைகள் அமைக்கப்பட்டமை.

## கோப்பிச் செய்கையின் வீழ்ச்சி

கோப்பிப் பயிர்ச் செய்கை 1837 இலிருந்து 1847 வரையான பத்தாண்டுகளில் வேகமாக முன்னேற்றமடைந்தாலும் 1847 ஆம் ஆண்டளவில் கோப்பிச் செய்கை வீழ்ச்சியுற்றது. 1848 இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார பெரு மந்த நிலை பல்வேறு வகைகளில் இந்நாட்டுக் கோப்பிச்செய்கையின் பாதிப்புக்குப் பங்களித்த பிரதான காரணியாகக் குறிப்பிடலாம்.

இதனால் கோப்பிச் செய்கை தற்காலிகமாக வீழ்ச்சியுற்றாலும் மீண்டும் 1853 ஆம் ஆண்டளவில் நிலமை மாற்றமுறத் தொடங்கியது. முன்பிருந்த தடை அகன்று கோப்பிப்பாவனை மீண்டும் ஐரோப்பா எங்கும் பரவியது. லண்டனில் கோப்பி விலை மீண்டும் அதிகரித்தமையால் கோப்பித் தோட்டச் செய்கையாளர்களுக்கு நல்ல இலாபத்தைப் பெற்றுக்கொள்ளமுடிந்தது. இருப்பினும் அதிககாலம் செல்வதற்குள் 1868ஆம் ஆண்டில் கோப்பிப் பயிர்களை இலைவெளிறல் (ஹெமீலியா வெஸ்டாக்ஸ்) நோய் பீடித்தமையால் கோப்பிச் செய்கை அழிவுறத் தொடங்கியது. 1881ஆம் ஆண்டளவில் கோப்பிச்செய்கை முழுமையாக அழிந்துபோய்விட்டது. இதனால் வேறொரு பயிரை நாடும் நிலைக்குத் தோட்டச் செய்கையாளர் உள்ளாக்கப்பட்டனர்.

## பல்பயிர் யுகம்

இக்கட்டத்தில் பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டமையால் இக்காலம் ''பல் பயிர் யுகம்'' எனக் குறிப்பிடப்படுகிறது. கோப்பிச் செய்கை அழிவுற்றுச் செல்கையில் பயிர்ச்செய்கையாளர்கள் சிலர் சிங்கோனாவைப்பயிரிடத் தொடங்கினர். அது 'குயினைன்' எனும் மருந்து உற்பத்திக்குப் பாவிக்கப்பட்டது. 1878 அளவில் சிங்கோனாச் செய்கை அறுபத்தையாயிரம் ஏக்கர் அளவில் பரவியிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் ஜாவா போன்ற இடங்களிலும் சிங்கோனா பயிரிடப்பட்டது. மருத்துவச் செடியான சிங்கோனாவிற்கு அவ்வளவு பரவலான கேள்வி ஏற்படுவதற்கான சாத்தியம் இருக்கவில்லை. சிறிது காலத்தினுள் சிங்கோனாச் செய்கையையும் கைவிடநேர்ந்தது.

அதன் பிறகு முயற்சியாளர்களின் கவனம் தேயிலைச் செய்கையின்பால் திரும்பியது.

செயற்பாடு : கோப்பிச் செய்கை விரிவடைந்ததற்கான காரணங்களை விளக்குக.


## தேயிலைப் பயிர்ச் செய்கை


தேயிலைத் தோட்டம் - படம் 2.3

1873ஆம் ஆண்டளவில் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்ட தேயிலைச் செய்கை பத்தாண்டுகளுக்குள் வேகமாகப் பரவத் தொடங்கியது. 1875இல் ஐந்நூறு ஏக்கரளவில் பயிராகியிருந்த தேயிலை 1887ஆம் ஆண்டளவில் ஒன்றரை இலட்சம் ஏக்கரளவுக்கு வியாபித்தது. 1890ஆம் ஆண்டளவில் தேயிலைச் செய்கையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. தேயிலைச் செய்கையின் வெற்றிக்குப் பல்வேறு காரணங்கள் பங்களிப்புச் செய்தன.

## தேயிலைச் செய்கை பரவுதலுக்குப் பங்களித்த காரணிகள் :

- லண்டன் சந்தையில் தேயிலையின் விலை அதிகரித்தமை.
- உற்பத்தி பெருமளவுக்கு இயந்திரமயமானமை.
- பசளைப் பாவனை அதிகரித்தமை.
- புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டமையும் வேறு வசதிவாய்ப்புக்கள் பெருகியமையும்.
- கொழும்புத் துறைமுகம் விருத்தி செய்யப்பட்டமை.
- தேயிலையின் உற்பத்திச் செலவைக் குறைத்துக்கொள்ள முடிந்தமை.
- லண்டன் சந்தையில் சீனத் தேயிலைக்கு இருந்த கேள்வி குறைந்தமை. இலங்கை, இந்தியத் தேயிலைக்கான கேள்வி அதிகரித்தமை.
- தென்னிந்தியத் தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டதால் ஊழியத்தை மலிவாகப் பெற்றுக்கொள்ள முடிந்தமை.




தேயிலை பயிரிடப்படும் இடங்கள்
படம் 2.4


தேயிலைச்செய்கை வேகமாக அதிகரித்தமையால் அதனைப் பீடிக்கும் நோய்களைக் கட்டுப்படுத்தவும் குறைந்த செலவில் கூடிய அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் 1925 ஆம் ஆண்டில் தலவாக்கலையில் தேயிலை ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

முதலாம் உலக மகா யுத்தத்தால் தேயிலை உற்பத்தி நாடுகள் மேலதிகமாக கையிருப்பில் இருந்த தேயிலையை சந்தைப்படுத்தியமையால் தேயிலையின் விலை வீழ்ச்சியடைந்து சென்றாலும் 1920ஆம் ஆண்டளவில் மீண்டும் தேயிலையின் விலை உயர ஆரம்பித்தது. தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கப்பெற்றமையால் 1920ஆம் ஆண்டளவில் மீண்டும் புதிய நிலங்களில் தேயிலை பயிரிடத் தொடங்கினர். 1929இல் ஏற்பட்ட உலகப் பெரும் பொருளாதார மந்தத்துடன் தேயிலை ஏற்றுமதி குறைந்து தேயிலையினால் ஈட்டப்பட்ட வருமானமும் குறைவடைந்தது. இவ்வாறாக ஆரம்பத்திலிருந்தே உலகச் சந்தையில் இதன் விலை கூடிக்குறைந்தாலும் 1920ஆம் ஆண்டை அடையும்போது இலங்கை ஏற்றுமதி செய்த பொருட்களுள் தேயிலையே முதன்மை இடத்தைப் பெற்றுக்கொண்டது.

## தெங்குச் செய்கை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் விருத்தியடைந்த இன்னுமொரு பயிர் தெங்கு ஆகும். ஆதிகாலத்தில் இருந்தே இலங்கையில் தெங்குச் செய்கை காணப்பட்டதோடு, ஒல்லாந்தரின் காலத்தில் அவர்களும் தெங்குச் செய்கையில் ஆர்வம் காட்டியதாகத் தெரியவருகிறது. தேங்காய், புண்ணாக்கு, வெட்டுத் தேங்காய், கொப்பரை, தும்பு, கயிறு என்பன இக்காலத்தில் முக்கிய உற்பத்திகளாகக் காணப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரை இறுதியில் அப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

கோப்பி, தேயிலைப் பயிர்ச்செய்கை சம்பந்தமாக ஐரோப்பியர்கள் உத்வேகம் காட்டினாலும் தெங்குச்செய்கை தொடர்பாக அந்தளவு கவனத்தைச் செலுத்தவில்லை. ஐரோப்பியர்கள் தெங்குச்செய்கைமீது முதலீடு செய்வதற்கு அவ்வளவு தூரம் கவனஞ் செலுத்தாமைக்கு ஆரம்பத்திலிருந்தே தெங்குச் செய்கை சுதேசிகளின் கட்டுப்பாட்டினுள்ளே இருந்தமையே காரணமாகும். தெங்குச் செய்கை சுதேசிகளின் கைகளில் இருந்தாலும் அதன் உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்பும் வேலைகள் முழுமையாக ஐரோப்பிய வர்த்தகத் தாபனங்களின் கைகளிலேயே காணப்பட்டன. 1910ஆம் ஆண்டளவில் எட்டரை இலட்சம் ஏக்கரளவில் தெங்குச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 1920ஆம் ஆண்டளவில் வெளிநாட்டு செலாவணி உழைப்பில் 27 வீதத்தை தெங்கு உற்பத்திகளால் ஈட்டிக்கொள்ள முடிந்தது. இலங்கையின் தெங்குச் செய்கையில் கணிசமான பகுதி உள்நாட்டு நுகர்வுக்காகப் பயன்படுத்தப்பட்டதோடு, எஞ்சிய பகுதி ஏற்றுமதி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டது. தெங்குச்செய்கையை முன்னேற்றுவதற்காகவும். அதன் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள்




தென்னைப் பயிர்ச்செய்கையும் ஏனைய ஏற்றுமதிப் பொருட்களும் விளையும் பிரதேசங்களும்

படம் 2.5

தொடர்பாக ஆராய்ச்சிகள் செய்வதற்காகவும் லுணுவிலையில் தெங்கு ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்பட்டது.

## இறப்பர் செய்கை


பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் பிரித்தானியர்களால் அறிமுகஞ் செய்யப்பட்ட இன்னொரு பணப்பயிர் இறப்பர் ஆகும். கோப்பியின் அழிவைத் தொடர்ந்து மத்திய மலைப் பிரதேசங்களில் தேயிலைச் செய்கை ஆரம்பமானதோடு களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் இறப்பர் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. வர்த்தகப் பயிர்ச் செய்கையாக இறப்பர் பயிரிட ஆரம்பிக்கப்பட்டது 1870 களிலாகும். மோட்டார் வாகனக்கைத்தொழிலின் விருத்தியுடன் இறப்பர் பாவனையும் அதிகரிக்கத் தொடங்கியது. 1913 ஆம் ஆண்டாகும்போது இலங்கையின் நிலப்பரப்பில் இரண்டு இலட்சத்து இருபதினாயிரம் ஏக்கர் அளவில் இறப்பர் பயிர்ச்செய்கை பரந்திருந்தது.

## இறப்பர் பயிர்ச்செய்கையின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள்

- ❖ முதலாம் உலக மகாயுத்தத்தின் போது இறப்பரின் விலை அதிகரித்தமை.
- ❖ ஐக்கிய அமெரிக்கா எமது நாட்டு இறப்பரைப் பெருமளவில் கொள்வனவு செய்தமை.
- ❖ மோட்டார் வாகனக் கைத்தொழிலின் உலகளாவிய அதிகரிப்பு.

1929 இல் ஏற்பட்ட உலகப் பொருளாதாரப் பெருமந்தம் இலங்கையையும் பாதித்தது. அதன் பிரதிபலனாக இறப்பரின் விலையும் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

மேலே குறிப்பிட்ட காரணிகளுக்கு ஏற்ப வர்த்தகப் பயிர்ச்செய்கையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமுறை ஒன்று எமது நாட்டில் வேர்விட்டிருந்தது.




இலங்கையில் இறப்பர் பயிர்ச்செய்கைப் பிரதேசங்கள்
படம் 2.6

செயற்பாடு :

❖ இலங்கைப்படம் ஒன்றில் தேயிலை, இறப்பர், தெங்கு என்பன பயிரிடப்பட்டுள்ள பிரதேசங்களைக் குறித்துக்காட்டுக.

❖ கோப்பி, தேயிலை, இறப்பர், தெங்கு எனும் பயிர்ச்செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணங்களை அட்டவணைப்படுத்துக.

## தன்னிறைவுப் பயிர்ச்செய்கை (நெற் பயிர்ச்செய்கை)

ஆதிகாலத்திலிருந்தே இலங்கையின் பிரதான வாழ்வாதாரமாகத் திகழ்ந்தது விவசாயமாகும். பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் நீர்வள நாகரிகம் அழிவுற்று மக்கள் படிப்படியாக ஈரவலயத்திற்கு இடம்பெயரத் தொடங்கினர். அப்பிரதேசங்களில் கிடைக்கப்பெற்ற அதிக மழைவீழ்ச்சியின் காரணமாக நீர்ப்பாசனத்தின் தேவை எழவில்லை. வாசனைத்திரவியங்கள், யானைத்தந்தம், முத்து, மாணிக்கம் போன்ற வியாபாரப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வியாபாரம் விரிவடைந்து சென்றது. அதன் காரணமாக நீர்ப்பாசனத்திற்கு முன்பிருந்த செல்வாக்குக் குறையத் தொடங்கியது. ஈரவலயத்தில் பலாக்காய், கிழங்கு வகைகள் போன்ற வேறு உணவுப்பொருட்கள் தாராளமாகக் கிடைக்கப்பெற்றமையால் நெற்செய்கையில் மட்டும் தங்கியிருக்கும் நிலை இல்லாமற் போனது. இதனால் பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே இந்நாட்டில் நெற்செய்கையில் அரசர்களும் பொதுமக்களும் காண்பித்த ஆர்வம் குறைவடையத் தொடங்கியது. போர்த்துக்கேயரின் ஆட்சியின்போது மேலும் நெற்செய்கை வீழ்ச்சியடைந்து சென்றது. நீர்ப்பாசனத்தை புனரமைப்பதன் மூலமும் இந்தியாவில் இருந்து தொழிலாளர்களைக் கொண்டுவந்து உற்பத்தியில் ஈடுபடுத்துவதன்மூலமும் மீளவும் விவசாயத்தைக் கட்டியெழுப்ப ஒல்லாந்தர் முயற்சிகளை மேற்கொண்டாலும் அது அவ்வளவு தூரம் வெற்றியை அளிக்கவில்லை. போர்த்துக்கேயரதும், ஒல்லாந்தரதும் ஆட்சிகாலத்தைப்போன்றே ஆங்கிலேயர் காலத்திலும் விவசாயச் செய்கையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் அடையப்பெறவில்லை.

பிரித்தானிய அரசாங்கம் பெருந்தோட்டச் செய்கையில் காண்பித்த ஆர்வத்தை வாழ்க்கைப் பயிர்ச்செய்கையில் காட்டுவதற்கு சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அப்படியிருந்தாலும் ஆரம்பகால ஆளுநர்களான நோர்த், மெயின்லன்ட் போன்றவர்கள் நீர்ப்பாசனத்தை புனரமைத்து நெற்பயிர்ச்செய்கையை விருத்தியாக்குவதற்கு முயற்சித்தாலும் அது அவ்வளவு தூரம் வெற்றிகரமாக அமையவில்லை.

பெருந்தோட்டச் செய்கையின் விருத்திக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், வாழ்வாதாரப் பயிர்ச்செய்கையைப் பல்வேறு விதங்களில் பாதித்தது. அவை வருமாறு :

1. பெரும்பாலான இலங்கையரின் வாழ்வாதாரமான விவசாய நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தின் ஆதரவு இல்லாமற் போனது.
2. பெருந்தோட்டத்துறைக்கு அரசாங்கத்தினால் கிடைக்கப்பெற்ற ஆதரவும் விவசாயிகளை மறைமுகமான பாதிப்புகளுக்கு உட்படுத்தியது. அரசாங்கம் பெருந்தோட்டத்துறைக்கு உதவுவதற்கான நடவடிக்கையாக மேற்கொண்ட விளைவிக்கப்படாத நிலங்களைச் சுவீகரிக்கும் தரிசு நிலச் சட்டத்தால் யாராவது ஒரு நபர் முப்பது வருடங்கள் தொடர்ச்சியாக உரிமை கொண்டிருந்ததாக நீதிமன்றத்திற்கு ஏற்கத்தக்க சட்டபூர்வமான

ஆதாரங்களைச் சமர்ப்பிக்க இயலாத போது கூட நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர் அவற்றைப் பெருந்தோட்டத்துறையினர் பணம் செலுத்தி பெற்றுக்கொள்வதற்கு சட்ட ஏற்பாடுகளைச் செய்தனர். ஒருவர் முப்பது வருடங்களாக உரிமைகொண்டிருந்ததை நிரூபிப்பதற்காக எந்தப் பதிவு அத்தாட்சிகளும் அக்கால மக்களிடம் காணப்படவில்லை.ஆகையால் கிராமத்தவர்களின் காணிகள் இல்லாமற்போய் விவசாய நடவடிக்கைகள் மோசமாக பாதிப்புற்று ஒன்றும் செய்துகொள்ள இயலாதவர்களாக்கப் பட்டனர்.

3. மலைநாட்டுக் காணிகளே பெருந்தோட்டத் துறைக்காகப் பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட்டன. இவ்விடங்களைத் துப்புரவு செய்தமையால் பள்ளத்தாக்கில் இருந்த வயல் நிலங்கள் அழிந்துபோயின.

4. காடுகள் அழிக்கப்பட்டமையால் விவசாயத்திற்குத் தேவையான நீர் ஊற்றுக்கள் வற்றிப்போயின.

5. கட்டாய சேவை இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமையால் நீர்ப்பாசன நடவடிக்கைகளைப் பராமரிக்கும் செயற்பாடு ஸ்தம்பித்துப் போனது.

பெருந்தோட்டச் செய்கையால் ஏற்பட்ட புதிய பொருளாதார அரசியல் மாற்றங்கள் விவசாயிகளைப் பொறுத்தமட்டில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. 1848இல் ஆங்கிலேயருக்கு எதிரான இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பற்றியோர் இவ்விவசாயிகளேயாவர்.

இவ்வாறாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் பிரித்தானியர் கையாண்ட கொள்கைகளினால் விவசாயம் சீர்குலைந்ததாக 1848 ஆம் ஆண்டு போராட்டத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரியவந்தது. ஆகையால் 1850இன் பின்னர் ஆங்கிலேய ஆளுநர்கள் சிலர் விவசாயிகளின் மீது கவனஞ் செலுத்தத் தலைப்பட்டனர்.

நீர்ப்பாசனத்தைப் புனரமைத்து விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகச் செயற்பட்ட பிரித்தானிய ஆளுநர்கள்.

❖ 1855-1860 வரை இலங்கையில் பிரித்தானிய ஆளுநராக இருந்த ஹென்றிவோட், கிழக்கு மாகாணத்தில் இறக்காமம் குளத்தையும் அம்பாறைக் குளத்தையும் தென் மாகாணத்தில் கிரம, உறுபொக்க குளங்களையும் மாத்தளை, ஊவா பிரதேசங்களில் சிறிய குளங்களையும் கால்வாய்கள் பலவற்றையும் புனரமைப்புச் செய்தார்.

❖ 1866 இல் ஹெர்கியூலிஸ் ரொபின்சன், திஸ்ஸ மஹாராம குளத்தைத் திருத்தியமைத்தார்.

- ❖ 1872இல் வில்லியம் கிரகெரி, கந்தளாய் குளத்தைப் புனரமைப்புச் செய்ததோடு கலாவாவியிலிருந்து அநுராதபுரம்வரை நீரைக் கொண்டு செல்வதற்காக தாதுசேன மன்னனால் வெட்டப்பட்ட யோத கால்வாயின் ஒரு பகுதியைப் புனரமைத்தார்.



ஹெர்கியுலிஸ் ரொபின்சன் படம் -2.8

- ❖ 1883-1890 ஆத்தர் கோடன் கலாவாவியைப் புனரமைத்து. கிரகறி ஆளுநரால் ஆரம்பிக்கப்பட்ட கலா வாவியைத் திருத்தியமைக்கும் பணியைப் பூரணப்படுத்தினார். ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவற்றையும் திருத்தி அமைத்தார்.
- ❖ 1896இல் வெஸ்ட் றிஜ்வே, வட மாகாணத்தில் யோத வாவி, நாச்சதுவ வாவி என்பவற்றைப் புனரமைத்தார்.
- ❖ ஹென்றி ஆத்தர் பிளேக், நுவர வாவியைப் புனரமைத்தார்.
- ❖ மக்கலம், மினிப்பே கால்வாயைப் புனரமைத்தார்.
- ❖ 1900ஆம் ஆண்டில் வெஸ்ட் றிஜ்வே ஆளுநர் நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தை ஆரம்பித்தார். நீர்ப்பாசன நடவடிக்கையில் தேர்ந்த அறிவுள்ளோரை ஒன்றுபடுத்தி அவர்களது ஆலோசனையுடன் நீர்ப்பாசனத் தொகுதிகளை மேம்படுத்துவதற்காகப் புதிய கைத்தொழில்களைப் பொருத்தப்பாடு கருதி ஆரம்பிக்கவும் வேலைத்திட்டங்கள் தயாராகின.



வில்லியம் கிரகரி படம் - 2.9

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்தே ஸ்தம்பித்துப் போயிருந்த விவசாய நடவடிக்கைகளை ஓரளவுக்கேனும் மேம்படுத்த இவர்களால் முடியுமாக இருந்தது. றொபின்ஸன், கிரகெறி போன்ற ஆளுநர்கள் கிராம விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தானிய வரியை அகற்றியதன் வாயிலாக ஆதர் ஹவ்லொக் ஆளுநரும் கிராமிய விவசாயிகளின் நலன் கருதி செயற்பட்டுள்ளார்.

கிராம மக்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கும் நோக்குடன் 1911 இல் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் அமைக்கப்பட்டன. பதினைந்து ஆண்டுகள் செல்வதற்கிடையில் இவ்வாறான சங்கங்கள் முந்நூறு அமைக்கப்பட்டதிலிருந்து இவை எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளன என்பது தெளிவாகின்றது. இலங்கை விவசாயிகளின் நலன்கருதி இக்கடன் வழங்கும் சங்கங்களினால் ஆற்றப்பட்ட பணி அளப்பரியதாகும். கிராமிய விவசாயிகளுக்கு

நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசின் கொள்கைத்திட்டத்தில் உள்ளடங்காத போதிலும் சில ஆளுநர்கள் அவ்விடயத்தில் கவனம் செலுத்தினர். அதனால் கிராமிய மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்பட்ட இவ்வாளுநர்களின் பணி பாராட்டுக்குரியதாகும்.

செயற்பாடு

- கிராமிய விவசாயத்தை மேம்படுத்துவதற்காக பிரித்தானிய ஆளுநர்களால் ஆற்றப்பட்ட சேவைகளைப்பற்றிக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- உமக்கு விளங்கும் விதத்தில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் காரணமாக தேசிய விவசாய நடவடிக்கைகளைக் கவனியாது விட்டமையால் சமூகத்துக்கு ஏற்பட்ட மோசமான விளைவுகள் யாவை எனப் பட்டியலிடுக.

## நவீனமயமாதலும் மேற்கத்தியமயமாதலும்

- இருபது நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலம், தேசியத் தன்மையுடன் உருவாகி வளர்ச்சிபெற்ற எமது பாரம்பரியம் பிரித்தானியரின் ஆளுகையுடன் முழுமையாக மாற்றமடைந்தது.
- ஆகையால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பாதியில் இலங்கை மிகவும் வேகமாக மேற்கத்தியமயமாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது.
- இந்நாட்டை முதலாளித்துவப் பொருளாதார முறையில் இட்டுச் செல்வதற்காக ஆங்கிலேய நிர்வாகிகள், அதற்குத் தேவையான பணம் படைத்த வர்க்கத்தையும், தொழிலாளர் வர்க்கத்தையும் வெளிநாடு களிலிருந்து இந்நாட்டுக்கு அழைத்து வந்தனர்.
- படிப்படியாக வளர்ச்சியுற்ற முதலாளித்துவப் பொருளாதாரத்தினுள் தனியார் முயற்சிகள் வளர்ச்சியுற்றன.
- தேசியத் தன்மைக்குரிய அரசியல், சமூகம், பொருளாதாரம், கலாசாரம் ஆகிய சகல துறைகளையும் சீர்குலைத்துக் கொண்டு, மேற்கத்திய முறைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட வாழ்க்கைமுறை மேலோங்கியது. அதனூடே வளர்ச்சி பெற்ற பிரதான அங்கமாக மத்தியதர வர்க்கமும் தொழிலாள வர்க்கமும் உருவாகின.

## மத்தியதர வர்க்கத்தின் எழுச்சி

இலங்கையில் மத்தியதர வர்க்கம் உருவானது கீழ்வரும் இரு தகுதிகளின் அடிப்படையிலாகும்.

- செல்வம்
- கல்வி

இந்நாட்டவர்களுக்கு இத்தகுதிகள் இரண்டும் கிடைக்கப்பெறும் சூழ்நிலையை கோல்புறுக்கின் சீர்திருத்தங்கள் உருவாக்கிக் கொடுத்தன.

கோல்புறுக் முன்வைத்த சீர்திருத்தங்களுள் முக்கியமான ஒன்று, ஆங்கில மொழிக் கல்வியை ஆரம்பித்தமையாகும். இதன் பிரதிபலனாக சுதேசிகளுக்கு ஆங்கிலக் கல்வியை வழங்கி, அவர்களுக்கு அரச பணிகளில் அமரச் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு ஆங்கிலக் கல்வியைப் பெற்ற இக்கூட்டத்தினர் பின்னர் சுதேச கலாசாரத்தை நிராகரிக்கும் ஒரு கூட்டமாக மாறினர். இதனால் அவர்கள் சமூகத்தில் வெளிப்படையாகத் தெரிகின்ற கனவான்களாயினர்.

இலங்கையின் தென்மேற்குக் கரையோரப் பிரதேசங்களிலும், வடக்கிலும் கிறிஸ்தவ சமயப் பாடசாலைகள் பெருமளவில் தொடங்கப்பட்டு இருந்ததோடு, அவற்றில் உயர்ந்த அந்தஸ்துப் பெற்ற தலைவர்களினதும் தாழ்ந்த குலமாகக் கருதப்பட்டவர்களிலிருந்த வல்லமை பொருந்தியவர்களினதும் பிள்ளைகள் இவ்வாங்கிலக் கல்வியால் பிரயோசனமடைந்து, உயர் பதவிகளுக்கு நியமனம் பெறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்வாறு உயர் பதவிகளிலும் ஏனைய தொழில்களிலும் ஈடுபட்ட கற்றபிரிவினர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கமாக ஒன்றுபட்ட அமைப்பாக மாறுவது விஷேட பண்பாகக் காணப்பட்டது.

ஐரோப்பியப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றிய இக்கூட்டத்தினர் சாராயக் குத்தகை வியாபாரத்தின் மூலமும், பெருந்தோட்டத் துறைக்குத் தேவைப்பட்ட சேவைகளை வழங்குவதன் மூலமும் தமது செல்வத்தைப் பெருக்கிக் கொண்டனர். கரையோரப் பிரதேசங்களிலிருந்து மலைநாட்டிற்கு வந்த முயற்சியாளர்கள், பெருந்தோட்டத் துறைக்குத் தேவையான போக்குவரத்துச் சேவைகள், காடுகளைத் துப்புரவு செய்தல், கட்டடங்களைக் கட்டுதல் போன்ற சேவைகளை வழங்கி பணம் சம்பாதிக்கத் தொடங்கினர்.

இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் தேயிலை, இறப்பர் செய்கைக்குப் பங்களித்ததோடு இலங்கையில் பேரளவிலான தெங்குச் செய்கையில் ஈடுபட்டு அத்துறை முழுவதையும், இம்மத்தியதர வர்க்கத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். கொழும்பு, சிலாபம், குருநாகல் என்னும் இடங்களை எல்லையாகக் கொண்ட தென்னை முக்கோணப் பிரதேசத்தில் இருந்த அனைத்துத் தென்னந்தோட்டங்களும் இலங்கையருக்கு உரித்தான-திலிருந்து இது தெளிவாகின்றது.

காரீயச் சுரங்கக் கைத்தொழிலின் மூலம் பெருஞ் செல்வத்தைத் திரட்டிக் கொண்டவர்களும் மத்தியதர வர்க்கத்தினரிடையே முக்கியத்துவம் பெற்றனர். செல்வத்தைப் பயன்படுத்தி தமது பிள்ளைகளுக்கு உயர்கல்வியை வழங்குவதற்கும் அவர்களால் முடிந்தது. ஆங்கிலக் கல்வி பெற்ற அவர்கள் பிரித்தானியப் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைப் பெற்றுக் கொள்ளும்

சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றனர். இதனால் இருபதாம் நூற்றாண்டாகும்போது ஆங்கிலக் கல்வி கற்ற பணம்படைத்த மத்தியதர வர்க்கம் ஒன்று உருவானது.

செல்வத்தைச் சேகரித்துக் கொண்டதன் மூலம் இம்மத்தியதர வர்க்கத்தில் சேர்ந்து கொண்ட கனவான்களில் சிலருக்கு ஆங்கிலக் கல்வி அறிவு இல்லாதுவிடினும், அவர்களது பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இவர்களும் மத்தியதர வர்க்கத்தில் சேர்ந்து கொண்டனர். இவ்வகுப்பைச் சேர்ந்த பெரும்பான்மையினர் ஆங்கிலக் கல்வி பெற்றவர்களாக இருந்தமையால், பொதுவாக ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத்தினராகவே கருதப்பட்டனர்.

செல்வமும் கல்வியும் அவர்களிடம் இருந்தாலும் அரசியல் அதிகாரம் இருக்கவில்லை. நிர்வாக நடவடிக்கைகள் தொடர்ந்தும் பிரித்தானியர்களின் கைவசமே இருந்தது. ஆங்கிலக் கல்வியைப் பெற்று மேற்கத்திய வாழ்க்கை முறையைக் கையாண்ட இவர்கள் பிரித்தானிய ஆட்சி முறையால் தோன்றிய புதிய சமூக சக்தியாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் பின்னர் தமது வர்க்கத்தினரின் பலத்தை வெளிக்காட்டுவதற்காக அரசியல் பலத்தைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். இதற்காக பிற்காலத்தில் அரசியல் சீர்திருத்தப் போராட்டங்களில் ஈடுபட ஆரம்பித்தனர்.

## தொழிலாளர் இயக்கம்

மன்னர் ஆட்சிக் காலங்களில் அரச பொதுச் சேவைக்குத் தேவையான ஊழியத்தைப் பெற்றுக்கொண்டது இலவசமாகக் கிடைக்கப்பெற்ற கட்டாய சேவையான இராஜகாரிய முறையாலாகும். குளங்களை அமைத்தல், நீர்ப்பாசனக் கால் வாய்களைத் திருத்தியமைத்தல், பாதைகளை வெட்டுதல், புனரமைத்தல் போன்ற சகல காரியங்களுக்கும் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் குறிப்பிட்ட நாட்களுக்கு இலவசமாகவும் கட்டாயமாகவும் தமது சேவைகளை வழங்கி வந்தனர்.


அப்படியிருந்தாலும் பிரித்தானியர்களின் கீழ் அந்நிலை மாற்றமடையத் தொடங்கியது. இலங்கையில் பெருந்தோட்டச் செய்கையின் ஆரம்பத்துடன் ஊழியத்தைப் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளும் ஒரு முறை உருவாகத் தொடங்கியது. இலவசமாக சேவையைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாகச் சம்பளம் கொடுத்து ஊழியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆங்கிலேயர் நடவடிக்கை எடுத்தனர். அப்படியிருந்தாலும் சுதந்திரமான வாழ்க்கை முறை ஒன்றிற்குப் பழக்கப்பட்டிருந்த இந்நாட்டு மக்கள் கூலிக்கு வேலைசெய்வதைத் தாழ்வானதாகக் கருதினர். ஆகையால் பெருந்தோட்டங்களுக்குத் தேவையான உழைப்பை இந்நாட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு இயலாதிருந்தது. எனவே மத்திய மலைநாட்டின் கோப்பி, தேயிலைத் தோட்டங்களில் பயிரிடும் நடவடிக்கை களுக்காகத் தென்னிந்தியாவிலிருந்து. தொழிலாளர்கள் கூட்டிவரப்பட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியளவில் கொழும்பு, கண்டி, காலி போன்ற நகரங்களிலும் பல்வேறு சேவைகளுக்காக ஊழியர்கள் தேவைப்பட்டனர். பொதிகளை ஏற்றி இறக்குதல், துணி சலவைசெய்தல், தள்ளுவண்டிகளை இழுத்தல் போன்ற பல்வேறு சேவைகளுக்காகவும் நகரங்களுக்கு தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். தென்னிந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட தொழிலாளர் தோட்ட வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். நகரங்களில் வேலை பார்ப்பதற்கு பெருமளவில் சென்றவர்கள் இந்நாட்டவராவர்.

தோட்டங்களைப் போன்றே நகரங்களிலும் சிரமமான வேலைகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலியே வழங்கப்பட்டது. இவ்விரு சாராரையும் கொண்டதாகவே தொழிலாளர் வர்க்கம் இருந்துவந்தது. மேலும் தேசிய நகரத் தொழிலாளர்களும் தோட்டத் தொழிலாளர்களும் ஒருவருக் கொருவர் தொடர்பற்ற, வேறுபட்ட இரு தொகுதியினராக வளர்ச்சியுறத் தொடங்கினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் நகரப் புறங்களில் வாழ்ந்த மத்தியதர வர்க்கத்தினர் தமது உரிமைகளைக் கோரிக் குரலெழுப்பத் தொடங்கினர். நகர மத்தியதர வர்க்கத்தினர் முக்கியமாக நிர்வாக, வர்த்தக மையமான கொழும்பைச் சூழ உருவானமையால், தொழிலாளர்களின் உரிமைக்குரல்கள் எழுந்ததும் இந்நகரிலேயாகும். 1893ஆம் ஆண்டில் கொழும்பு அச்சகத் தொழிலாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தமே தொழிலாளர் போராட்டம் என்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது நடவடிக்கையாகும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரை இறுதியில் மத்தியதர வர்க்கத்தினரதும் ஆதரவைப் பெற்றுக் கொண்ட தொழிலாளர்கள் பல வேலை நிறுத்தங்களை மேற்கொண்டனர்.

- ❖ தள்ளுவண்டித் தொழிலாளரின் வேலைநிறுத்தம்.
- ❖ வெள்ளவத்தை நெசவாலைத்தொழிலாளர் வேலைநிறுத்தம்.
- ❖ சலவைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் என்பன குறிப்பிடத்தக்கவைகளாகும்.



ஏ. ஈ. குணசிங்க
படம் - 2.10

இக்கால கட்டத்தில் ஆரம்பமான இலங்கை அச்சகத் தொழிலாளர் சங்கம் இலங்கையில் தோன்றிய முதலாவது தொழிற் சங்கம் எனலாம். பிற்காலத்தில் பல்வேறு தொழில் செய்வோர்களைக் கொண்ட தொழிற் சங்கங்கள் தோற்றம் பெறத் தொடங்கியதுடன் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமது உரிமைகளைக் கோரிப் பல்வேறு வேலை நிறுத்தங்களைச் செய்வதனைப் பரவலாகக் காணக்கூடியதாக இருந்தது. தொழிலாளரின் தொழில் வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்காகவும்



எஸ். ஏ. விக்கிமசிங்க
படம் - 2.11

சம்பளத்தை அதிகரித்துக் கொள்வதற்காகவும் போராட்டங்களில் ஈடுபடுவது, இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பத்தில் ஆரம்பமானது இதற்குத் தலைமை தாங்கியவர் ஏ.ஈ குணசிங்க அவர்களாவார்.

தோட்டத் தொழிலாளர்கள் தொழிற் சங்கமாக உருவாவதற்கு சற்றுக் காலம் எடுத்தது. 1935 இன் பின்னர் அவ்வியக்கம் ஆரம்பமானது. இதற்குத் தலமை தாங்கியவர் கோ. நடேச ஐயர் அவர்களாவார்.

மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த வாலிபர்கள் இக்கால கட்டத்தில் இங்கிலாந்தில் கற்று மாக்சிய அரசியல் தலைவர்களினால் ஈர்க்கப்பட்டு, இலங்கை வந்து தொழிலாள வர்க்கத்தை அணி சேர்க்கத் தொடங்கினர். 1935 ஆம் ஆண்டளவில் இலங்கை சமசமாஜக் கட்சி தோன்றியதோடு பிலிப் குணவர்தன, கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்க, கலாநிதி என். எம். பெரேரா என்போர் அதற்குத் தலைமை தாங்கினர். பிற்காலத்தில் இவர்கள் நகர, தோட்டத் தொழிலாளர்கள் இருசாராரையும் கொண்ட தொழிற் சங்கங்களை ஆரம்பிப்பதில் முன்னோடிகளாகச் செயற்பட்டனர்.

செயற்பாடு

இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் மத்தியதர வர்க்கம் எழுச்சி பெற்றது தொடர்பான தகவல்களைச் சேகரித்துச் சிற்றேடு ஒன்றைத் தயாரிக்குக.

பயிற்சி

ஆங்கிலேயரின் கீழ் தொழிலாள வர்க்கத்தினரின் ஆரம்பமும் விருத்தியும் தொடர்பாக கீழேத்தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

01. 1800ஆம் ஆண்டளவில் காணப்பட்டது, (சம்பளம் பெறும் ஊழிய முறைமையாகும் / கட்டாய சேவை இராஜகாரிய முறையாகும்.)

02. 1833இல் செயற்படுத்தப்பட்டது, (சம்பளம் பெறும் ஊழிய முறைமை/ கட்டாய சேவை இராஜகாரிய முறைமை.)

03. 1833லிருந்து இந்நாட்டிற்கு அழைத்துவரப்பட்ட தென்னிந்தியத் தொழிலாளர்கள் பெருமளவில் வாழ்ந்தது (நகரப்புறங்களிலாகும்/ தோட்டங்களிலாகும்.)

04. தேசிய தொழிலாளர்கள் கூடியளவில் உழைப்பில் ஈடுபட்டது (நகரங்களிலாகும்/ தோட்டங்களிலாகும்.)

05. நகரத் தொழிலாளர்களின் முதலாவது தலைவர் (ஏ.ஈ.குணசிங்க/ என். எம். பெரெரா) ஆவார்.

06. தோட்டத் தொழிலாளர்களுக்கு முதலில் தலைமைதாங்கியவர் (கோ நடேச ஐயர்/ எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ) ஆவார்.

07. இந்நாட்டுத் தொழிலாளர் போராட்டங்களுக்கு மத்தியதர வர்க்கத்தினரின் உதவி கிடைக்கப் (பெற்றது/ பெறவில்லை)

08. முதலாவது வேலைநிறுத்தம் (கொழும்பு அச்சகத்/ வெள்ளவத்தை நெசவாலைத்) தொழிலாளர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

09. தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைத்துக் கொண்டது (1835/ 1935) ஆம் ஆண்டிலாகும்.

## தேசிய இயக்கம்

இலங்கையில் தேசிய இயக்கம் ஆரம்பமானது பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலாகும்.

இலங்கை தேசியஇயக்கம் இரு பகுதிகளைக் கொண்டது. அவை பத்தொன்பதாம் நூற்றாண்டில் இறுதி அரைப் பகுதியில் ஆரம்பமான தேசிய மறுமலர்ச்சி இயக்கமும் இருபதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் ஆரம்பமான அரசியல் யாப்புச் சீர்திருத்த இயக்கமுமாகும்.

தேசியக் கல்வி கற்றவர்களால் சமய, கலாசார. மறுமலர்ச்சி ஒன்றைத் தோற்றுவிப்பதற்கு இயக்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதேவேளை ஆங்கிலம் கற்றவர்கள், அரசியல் அதிகாரத்தைக் கோரிப் பெறுவதற்கான இயக்கம் ஒன்றையும் உருவாக்கினர்.

## சமய கலாசார மறுமலர்ச்சி

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இந்நாட்டின் கல்விமுறை மிஷனரிகளால் முன்னெடுக்கப்பட்டது (கிறிஸ்தவ சமயப் பிரசார தாபனங்களால்).

கிறிஸ்தவ சமயத்தை இந்நாட்டில் இயன்றளவு பரப்பி சுதேசிகளை கிறிஸ்தவ சமயத்தைத் தழுவச் செய்வது இவர்களது நோக்கமாக இருந்தது. கிறிஸ்தவ குருமார் தேசிய மொழிகளைக் கற்று கொண்டு, மிஷனரிக் கல்வியை முன்னெடுத்துச் சென்றனர். கிறிஸ்தவத்தைப் பரப்பும் நோக்குடன் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலைகளில் கிறிஸ்தவ சமயத்தைப்பற்றிச் சிங்களத்திலும் தமிழிலும் எழுதப்பட்ட நூல்களை அச்சிட்டு விநியோகித்தனர். இதனால் தேசிய சமயங்கள் பலவீனப்படும் ஆபத்திற்கு முகங்கொடுத்தன. அக்காலக் கல்விமுறைக்கு அரசாங்கத்தின் உதவி கிடைக்கப் பெறாத அதே வேளை மிஷனரி பாடசாலைகளுக்கு அரசாங்கத்தின் அனுசரணை கிடைக்கப்பெற்றது. இதனால்

தாய்மொழிப் பாடசாலைகள் வீழ்ச்சியுற்றிருந்தன. ஆங்கிலேயரின் கீழ் தமது சமய, கலாசாரத்திற்கு ஆபத்து விளைவதாக விளங்கிக் கொண்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் 1860 ஆம் ஆண்டளவில் தமது சமய, கலாசாரத்தை எழுச்சியுறச் செய்யப் பல்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பௌத்த சமயப் புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதில் முன்னோடிகளாக பௌத்த குருமார்கள் சிலர் திகழ்ந்தனர். அவர்கள் வருமாறு :

❖ மிகெட்டுவத்த குணானந்த தேரர் - ஐம்பெரும் (பஞ்சமகா) விவாதங்களை மேற்கொள்ளல்.

❖ ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கல தேரர் - 1873 இல் மாளிகாகந்தையில் வித்தியோதய பிரிவேனா ஆரம்பிக்கப்பட்டமை.



மிகெட்டுவத்த குணானந்த தேரர்
படம் 2.12



ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல தேரர்
படம் - 2.13

❖ இரத்மலானை தர்மாலோக தேரர் - 1875 இல் பேலியகொடை வித்தியாலங்கார பிரிவெனாவை அமைத்தல்.

❖ வலானே சித்தார்த்த தேரர் - 1939 இல் இரத்மலானையில் பரம தம்ம சேத்திய பிரிவெனாவை நிறுவுதல்.


## மிகெட்டுவத்த குணானந்த தேரர்

பௌத்த குருமார்களின் தலைமைத்துவத்தின் கீழ் பௌத்த மறுமலர்ச்சி ஏற்படுவதைக் கண்ட கிறிஸ்தவ ஆட்சியாளர்களும் கிறிஸ்தவ குருமார்களும் இவ்வியக்கங்களைக் கட்டுப்படுத்த முயன்றனர். கிறிஸ்தவ குருமார்களுக்கு பௌத்த சமயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகப் பல்வேறு வாதப் பிரதி விவாதங்களில் ஈடுபட நேர்ந்தது. அவற்றுள் முக்கியமானவை வருமாறு :

1864 ஆம் ஆண்டு பெத்தேகமை, 1865 - வராகொடை, 1866 - உதம்மிட்ட, 1871 - கம்பளை, 1873 - பாணந்துறை.

இவ்விடங்களில் இடம்பெற்ற விவாதங்களினூடே கிறிஸ்தவ குருமாருக்கு சவால் விடுப்பதற்கு அக்கால பௌத்த குருமார்களுக்கு நேர்ந்தது. இவ்விவாதங்களுள் மீகெட்டுவத்தை குணானந்த தேரரால், நடத்தப்பட்ட பாணந்துறை விவாதம் முக்கியத்துவத்திற்குரியதாகும். இவ்வாறான விவாதங்களால் பௌத்த சமயத்தில் புத்துணர்ச்சி பிறக்கத் தொடங்கியது.

பாணந்துறை விவாதம் தொடர்பான செய்திகளைப் பத்திரிகை மூலம் அறிந்த அமெரிக்கரான ஹென்றி ஸ்டீல் ஒல்கொட், பௌத்த சமயத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக இலங்கைக்கு வந்து அச்சமயத்தைத் தழுவிக் கொண்டார். இலங்கையில் நவீன பௌத்த கல்விக்கு அத்திவாரமிட்ட பெருமை இவரையே சாரும். 1880இல் இலங்கைக்கு வந்த அவர் ஆற்றிய சேவைகளாவன


ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
படம் - 2.15

- ❖ பிரம்மஞான சங்கம் என்னும் பௌத்த அமைப்பாற் தோற்றுவித்து, ஆனந்த, நாளந்த, தர்மராஜ, மஹிந்த கல்லூரிகளை ஆரம்பித்தமை.
- ❖ "சரசவி சந்தரெச" என்னும் பத்திரிகையை ஆரம்பித்து பௌத்தர்களை ஒன்றுபடுத்தியமை.
- ❖ ஞாயிறு தினங்களில் சமயப் பாடசாலைகளை நடத்தியமை.
- ❖ வெஸாக் முழுநோன்மதி தினத்தை விடுமுறை தினமாக்கிக் கொள்வதற்குப் பங்களித்தமை.
- ❖ பெண்களின் கல்விக்காக விஸாகா, மியூஸியஸ் கல்லூரிகளைத் தோற்றுவித்தமை.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பௌத்த பாடசாலைகளை ஆரம்பித்தமையால், இலங்கைப் பௌத்தர்களிடையே தேசிய உணர்ச்சி கட்டியெழுப்பப்பட்டது. இதன் மூலம் சிங்கள மொழி, பழக்க வழக்கங்கள், நாட்டின் வரலாறு என்பவற்றில் பெரும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது.

ஒல்கொட் அவர்களின் பின்னர் பௌத்த மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர்கள், அநாகரிக தர்மபால, வனசிங்ஹ ஹரிச்சந்திர, டீ. பி ஜயதிலக, ஆத்தர் வீ. தியெஸ், பியதாச சிறிசேன, அமதோரிஸ் மெண்டிஸ், ஆர். ஏ. மிராண்டோ, டீ. ஏ. ஹேவாவிதாரன என்போராவர். இவர்கள் துடிப்பான இளந் தலைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



டி. பி. ஜயதிலக
படம் - 2.16



அநகாரிக தர்மபால
படம் - 2.17

அநகாரிக தர்மபால,
வலிசிங்ஹ ஹரிச்சந்திர,
டீ. பீ. ஜயதிலக,
ஆத்தர். வீ. தியெஸ்,
பியதாஸ சிரிசேன,
அமதோரிஸ் மென்டிஸ்,
ஆர். ஏ. மிரெண்டா,
டீ. ஏ. ஹேவாவிதாரண
ஆகியோர் இளந்தலைவர்
களாவர்.



பியதாஸ சிறிசேன
படம் - 2.18



வலிசிங்க ஹரிச்சந்திர
படம் - 2.19

ஒல்கொட் அவர்களின் பிரதம சீடரான அநகாரிக தர்மபால அவர்கள இவர்களுள் குறிப்பிடத்தக்கவராவார். வெளிநாட்டு அதிக்கத்தினால் அழிந்தொழிந்து போன தேசாபிமானத்தை மீள உருவாக்குவதற்காக அவர் மிகவும் பிரயத்தனப்பட்டார். இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் சென்று பௌத்த சமயத்திற்கு சர்வதேசப் புகழைப் பெற்றுத் தருவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் போற்றுவதற்குரியன. இந்தியாவில் பௌத்த சமயத்தைப் பாதுகாப்பதற்குப் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்ட அவர் பௌத்தர்களிடையே ஆத்ம விசுவாசத்துடன் கூடிய அபிமானத்தை தோற்றுவிப்பதிலும் பெருஞ்சிரத்தையுடன் செயற்பட்டார். 1891 ஆம் ஆண்டு அநகாரிக தர்மபால அவர்கள் ஆரம்பித்த மகாபோதி இயக்கம், 1898 இல் டீ. பீ. ஜயதிலக அவர்களின் தலைமையின் கீழ் உருவான பௌத்த வாலிப சங்கம் என்பன பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்குத் தோள்கொடுத்துதவிய இரு அமைப்புகளாகும்.

## இந்து சமய மறுமலர்ச்சி

கிறிஸ்தவ மிஷனரிக் கல்வியின் மூலம் எதிர்நோக்க நேர்ந்த சவாலுக்கு முகங்கொடுப்பதற்கு இந்து சமயத்தவர்களும் ஒன்றுபடத் தொடங்கினர். அதன் பிரதிபலனாக இந்து சமயத்திலும் மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது. கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்களால் நடாத்தப்பட்ட பாடசாலைகளில் வழங்கப்பட்ட

கல்வியினால் இந்துக் கலாசாரமும் பாரம்பரிய பழக்கவழக்கங்களும் பலவீனப்பட்டுப் போகும் என்ற அச்சம் ஏற்பட்டது. இதனால் மிஷனரிக் கல்விக்கு எதிரான பல இயக்கங்கள் தோற்றம் பெற்றன. அவ்வாறான இயக்கத்திற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (1822 - 1897) அவர்கள் தலைமை ஏற்றார்கள்.



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
படம் - 2.20

கிறிஸ்தவப் பாடசாலையில் பயின்ற நாவலர் அவர்கள், பேர்ஸிவல் அடிகளாருடன் இணைந்து பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தார். பிற்காலத்தில் இந்து சமயத்தைத் தாக்கி, கிறிஸ்தவ மிஷனரிமார் வெளியிட்ட கருத்துக்களுக்கு நாவலர் பெருமான் தக்க பதில் அளித்ததோடு, சமயத்தைப் பாதுகாப்பதிலும் மிகவும் பிரயத்தனம் எடுத்துக் கொண்டார். தம்மினத்தவரின் பாரம்பரிய பெருமைகளையிட்டும் சைவ சமயத்தின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்துவதற்கும் செயற்பட்ட இவர், 1897 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை என்னும் இடத்தில் ஆங்கிலப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். பிற்காலத்தில் அது பிரசித்தி பெற்ற யாழ்ப்பாண இந்துக் கல்லூரியாக மிளிர்ந்தது. 1853 இல் இவரால் ஆரம்பிக்கப்பட்ட சைவ பரிபாலன சபை, இந்துக் கல்விச் சபை என்பவை இந்து சமயத்தவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் பெரும் பங்களிப்பைச் செலுத்தின.




சேர். பொன்னம்பலம் இராமநாதன்
படம் - 2.21

சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களும் இந்து சமய மறுமலர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றிய ஒருவராவார். இவர் தமிழ் மக்கள் மத்தியில் மாத்திரமன்றி சிங்கள மக்கள் மத்தியிலும் பிரபல்யமான மக்கள் தலைவர்களுள் ஒருவராவார். 1910 ஆம் ஆண்டு அரசியல், யாப்புச் சீர்திருத்தத்தின்படி படித்த இலங்கையர்களால் சட்டவாக்க கழகத்திற்கு அங்கத்தவர் ஒருவரைத் தெரிவு செய்யக் கிடைத்த சந்தர்ப்பத்தில் பெரும்பான்மைச் சிங்களவருடைய வாக்குகளைப் பெற்று, சிங்கள வேட்பாளரையே தோற்கடிக்கும் திறமையைப் பெற்றவராவார். 1915இல் ஏற்பட்ட சிங்கள - முஸ்லிம் இனக்கலவரத்தின்போது விசாரணையின்றி சிறைப்படுத்தப்பட்ட சிங்களத் தலைவர்களின் விடுதலைக்காக அயராது பாடுபட்டார். பரமேஸ்வராக் கல்லூரியையும் இராமநாதன் பெண்கள் கல்லூரியையும் தனது சொந்தச் செலவில் கட்டுவித்தார். இவற்றின் வாயிலாக இந்து கலாசார மறுமலர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணி அளவிடற்கரியதாகும்.

## இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி

இலங்கையில் பௌத்த, இந்து மறுமலர்ச்சி ஏற்பட்டதற்கு, அதே காலப்பகுதியாக முஸ்லிம் மக்கள் மத்தி யிலும் கலாசார விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியது. இஸ்லாமிய மக்கள் மத்தியில் தமது சமய, மொழி விடயங்களில் ஆர்வத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்து வதில் முன்னோ- டியாகத் திகழ்ந்தவா் அறிஞா் எம். சி. எம். சித்திலெப்பை (1832 - 1898) அவர்களாவர். முஸ்லிம் மக்கள் மத்தியில் கல்வித்துறையில் ஆர்வம் அற்றிருந்த ஒரு காலத்தில் அவர்கள் மத்தியில் கல்விதொடர்பான ஆர்வத்தை உருவாக்குவதில் அவரின் பங்களிப்பு மகத்தானதாகும். அரபு மொழியைக் கற்பதில் முஸ்லிம்களை ஊக்குவித்த அவர் ஆங்கில மொழியைக் கற்பதிலும் முஸ்லிம் மக்களைத் தூண்டினார். “மத்ரஸா” என்னும் முஸ்லிம்களின் சமயப் பாடசாலைகளைக் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றியமைப்பதில் ஈடுபட்டார். சித்திலெப்பை அவர்களின் தலைமையில் 1882 இல் மருதானை சாஹிராக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. கண்டியில் அன்று அவரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை அவரது பெயரால் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது. கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கத்தை அமைப்பதிலும் இவர் ஈடுபட்டார்.



அறிஞா் எம். சி. எம். சித்திலெப்பை
படம் - 2.22

தேசத்தில் சமயம், கலாசாரம், மொழி என்பவை சீர்குலைந்து போன ஒரு காலகட்டத்தில் இஸ்லாமிய கலாசாரத்தை மேம்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்ந்து, முஸ்லிம் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் அறிஞர் சித்திலெப்பை அவர்கள் தேசிய இயக்கத்திற்கு ஆதரவு வழங்கினார்.

## டி. பி. ஜாயா

முஸ்லிம்களின் கல்வி, கலாசார வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்புச் செய்தவர்களுள் டி. பி. ஜாயா அவர்களும் ஒருவராவார். 1914 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ‘‘சிலோன் முஸ்லிம் ரிவியு” (ceylon muslim review) எனும் சஞ்சிகையில் அவர் எழுதிய கட்டுரைகளின் மூலம் முஸ்லிம் மக்களுக்குக் கல்வியின் முக்கியத்துவத்தை விளக்கினார். முஸ்லிம் கல்விக்கு அவர் ஆற்றிய பணிகளில் உயிருள்ள சான்றாக விளங்குவது சாஹிராக் கல்லூரியாகும். அறிஞர் சித்திலெப்பை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சாஹிராக் கல்லூரியின் அதிபராக 1921 ஆம் ஆண்டு பதவி ஏற்று அதன் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன்

அரும்பணியாற்றினார். 1936 -1947 வரை பிரிதிநிதிகள் சபையின் நியமன அங்கத்தவராகவும், 1947 ஆம் ஆண்டு முதலாவது பாராளுமன்றத்தில் தொழில், சமுக சேவை அமைச்சராகவும் இருந்து முஸ்லிம்களின் முன்னேற்றத்தின் பொருட்டு செயற்பட்டார்.

செயற்பாடு :

இலங்கையில் சமய, கலாசார எழுச்சியை உருவாக்குவதில் தலைமைத்துவத்தை வழங்கிய சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் பற்றிய விடயங்களைக் கொண்ட சிறு நூல் ஒன்றை ஆக்குக.

## பத்திரிகைகளின் பங்களிப்பு

சமய மறுமலர்ச்சியுடன் இலங்கையில் கலாசார மறுமலர்ச்சிக்கும் வழி பிறந்தது. சிங்களம், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் நூல்கள் பலவும் வெளியிடப்பட்டன. இதே காலகட்டத்தில் வெளியான பத்திரிகைகள் இந்நோக்கங்களைச் சாதிக்கப் பெருமளவில் துணை செய்தன. அவ்வாறான முக்கியத்துவத்திற்குரிய சில பத்திரிகைகள் வருமாறு,

- 1864 - லக்மினி கிரண, லக்மினி பஹண, அருணோதய
- 1866 - 'ஞானார்த்த பிரதீபய' இன்றும் வெளிவரும் இது இலங்கையின் பழைய சிங்களப் பத்திரிகையாகும்.
- 1880 - சரசவி சந்தரெஸ எனும் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.
- 1902 - ''சிங்கள ஜாதிய'' என்ற பத்திரிகை பியதாஸ சிறிசேன அவர்களால் வெளியிடப்பட்டது.
- 1909 - தினமின பத்திரிகை டீ.ஆர்.விஜேயவர்தன அவர்களால் வெளியிடப்பட்டது.
- 1888 - இந்து சாதனம், 1930 - வீரகேசரி 1930 ஈழகேசரி 1931 - தினகரன் பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டமை. அறிஞர் சித்தி லெப்பை முஸ்லிம் நேசன், ஞானதீபம் எனும் இரு பத்திரிகைகளை வெளியிட்டார்.

**கலாசார மறுமலர்ச்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்.**


- சமய, கலாசார விடயங்களை அடிப்படையாகக் கொண்ட நாடகங்கள் தயாரிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டமை.
- பியதாஸ சிறிசேன டபிள்யூ.ஏ.சில்வா என்போரால் தேசிய உணர்ச்சியை ஊட்டும்வண்ணம் நாவல்கள் வெளியிடப்பட்டமை.
- திபெத் நாட்டவரான மகிந்த தேரர் மக்கள் மத்தியில் சமய உணர்ச்சியை ஊட்டும் வண்ணம் செயற்பட்டமை.

- வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவேனாக்கள் (சமயக் கல்வியைப் போதிக்கும் பாடசாலைகள்) பாளி, சமஸ்கிருத மொழிகளைக் கற்பித்தமை. இவற்றின் துணையுடன் சமயக் கல்வியைப் போதிக்க நாடெங்கும் பிரிவெனாக்கள் நிறுவப்பட்டமை.
- பிரம்மஞான சங்கம் எனும் பௌத்த சமய அமைப்பால் அறநெறிப் (சமய) பாடசாலைகள் நிறுவப்பட்டமை.
- பௌத்த இளைஞர் சங்கத்தின் மூலம் பௌத்த அறநெறிப் பாடசாலைகளின் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டமை.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் போன்ற மக்கள் தலைவர்கள் கையாண்ட செயற்பாடுகளால் இந்து சமயத்தில் எழுச்சி ஏற்பட்டமை.
- தமிழர்களால் 1888 இல் 'இந்துசாதனம்' என்ற பத்திரிகையும், 1930இல் வீரகேசரியும் 1930 ஈழகேசரியும் 1931 இல் தினகரன் என்னும் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டன.
- சித்திலெப்பை அவர்களால் 'முஸ்லிம் நேசன்' 'ஞானதீபம்' எனும் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- தேசிய கலாசாரம் சீரழிவுக்குட்பட்ட காலகட்டத்தில் இக்கல்விமான்களால் பிரித்தானியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் புதிய தேசியக் கலாசாரம் எழுச்சியுற்றது.

செயற்பாடு

- இலங்கையில் சமய, சலாசார மறுமலர்ச்சி ஏற்படுவதற்குப் பங்களித்த காரணிகள் யாவை ?
- இலங்கையில் சமய கலாசார மறுமலர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த தலைவர்களின் பணிகளை பட்டியற்படுத்துக.

## மது ஒழிப்பு இயக்கம்


டி. எஸ். சேனாநாயக்க
படம் - 2.23

தேசிய மறுமலர்ச்சி இயக்கத்தினால் கலாசார மறுமலர்ச்சி ஏற்பட்டதோடு, அரசியல் சீர்திருத்தக் கோரிக்கைக்கான போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. இதற்குப் பக்கத் துணையாக உதவிய காரணி மது ஒழிப்பு இயக்கமாகும். இருபதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மதுபாவனையால் நாடு முழுவதும் கலாசாரச் சீர்கேடு ஏற்படுவதைக் காணக்கூடியதாயிருந்தது.

தேசியத் தலைவர்கள் இதற்கு எதிராகச் செயற்படத் தொடங்கினர். 1911 ஆம் ஆண்டின் பின்னர் ஆங்கில அரசாங்கம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக மதுபானச் சாலைகளை அதிகளவில் திறக்க அனுமதித்தமையால் மதுபாவனை மேலும் பெருகும் என அஞ்சப்பட்டது. 1912 இல் அமுலில் வந்த மதுவரிச்சட்டம் அது சமூகத்திற்குக் கேடு பயப்பதாகக் கருதி, அதற்கு எதிரான இயக்கம் ஆரம்பமானது. மது ஒழிப்பு இயக்கம் என அறிமுகமான இயக்கத்துக்குத் தலைமை தாங்கியவர்கள் டி. சி. சேனநாயக்க, எப். ஆர். சேனநாயக்க, டீ. எஸ். சேனநாயக்க, அநகாரிக தர்மபால, எட்மன் ஹேவாவிதாரண, சேர். டீ. பி. ஜயதிலக்க, டபிள்யூ. ஏ. சில்வா, பியதாஸ சிறிசேன, ஆத்தர். வி. தியெஸ் எனும் கனவான்களாவர். இதனைக் கண்டு அஞ்சிய பிரித்தானிய ஆட்சியாளர்கள் இதற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையால், இது பரந்துபட்ட ஒரு தேசிய இயக்கமாக மாற்றம் பெற்றது. அரசியல் நோக்கம் உள்ள இயக்கமாக இல்லாத போதும் தேசியத் தலைவர்களை ஒன்றுபடுத்துவதில் மது ஒழிப்பு இயக்கம் வெற்றிபெற்றது. மது ஒழிப்பு இயக்கத்தின் ஊடே பௌத்த தலைவர்கள், தேசியத்தலைவர்களாக மாறுவதற்குச் சந்தர்ப்பம் கிட்டியது. பிற்காலத்தில் மது ஒழிப்பு இயக்கத் தலைவர்கள் அரசியல் சீர்திருத்த இயக்கத்தில் ஈடுபட்டு அதற்கு வெளிப்படையாக ஆதரவை வழங்கினர்.



எப். ஆர். சேனாநாயக்க
படம் - 2.24

பத்தொன்பதாம்நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் செயற்பட்ட சமய, கலாசார, மறுமலர்ச்சி இயக்கத்தோடு இணைவாக இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் செயற்பட்ட மது ஒழிப்பு இயக்கத்தால் பிரித்தானிய ஆட்சியா ளர்களுக்கு எதிராக நாட்டு மக்களால் மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சரியான வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. பிரித்தானிய நிர்வாகிகள் இந்நாட்டிலிருந்து வெளியேற்றப்படுகையில் சுதந்திரமானதும் தனித்தன்மையானதுமான கொள்கைகளைக் கட்டியெழுப்பிக்கொள்ள வேண்டும் என்பது புரிந்து கொள்ளப்பட்டது. அதற்காக எமது சமயப் பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்ட சமய ஒழுக்க வழிமுறைகளை முழுமையாக மீளவும் கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும் என்றும், அது எவ்வாறு நடைபெற வேண்டும் என்பதுவும் சமய, கலாசார, மறுமலர்ச்சி இயக்கத்தால் சுட்டிக்காட்டப்பட்டது. என்றாலும் தேசிய இயக்கம் என ஆங்கிலம் கற்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் போராட்டங்கள் இவ்வழிகாட்டுதலைப் புறக்கணித்தமையால் 1948 இல் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரும் எம்மால் பரிபூரண சுதந்திரத்தை அனுபவிக்க முடியாதிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## அரசியல் போராட்ட இயக்கம்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத்தினர் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்திருந்தனர். இக்கால கட்டத்தில் இந்தியாவில் தேசிய இயக்கம் வேகமாக வளர்ச்சி கண்டிருந்தது. ஆங்கிலம் கற்ற இலங்கையர்களின் அரசியல் போராட்டத்தில் அதன் தாக்கம் எதிரொலித்தது. ஆங்கிலத்தில் கற்று வெளிநாடு சென்று உயர் கல்வியைப் பெற்று மீண்ட இலங்கையரிடையே தாராண்மை(லிபரல்)வாதக் கொள்கையைப் பற்றிய அறிவுபூர்வமான தெளிவு, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையின் தேசிய இயக்கம் வளர்ச்சி பெறுவதில் செல்வாக்குச் செலுத்தியது. தாம் பெற்ற கல்விக்கு ஒப்பாக சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் பிரவேசிக்கும் சந்தர்ப்பம் சுதேசிகளுக்குக் கிட்டவில்லை. இலங்கை மத்தியதர வர்க்கம் அரசியலிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தமையால் சீர்திருத்தங்களின் மூலம் அரசியல் விடயங்களில் ஈடுபட அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. இக்காரணங்களினால் சுதேச மத்தியதர வர்க்கத்தினரிடையே பிரித்தானிய ஆட்சியைப் பற்றிய அதிருப்தி வளர்ந்திருந்தது. அதனால் அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் இலட்சியத்துடன் தேசிய இயக்கத்தில் இணைந்து கொள்ளத் தொடங்கினர்.

ஆங்கில மொழிமூலக் கல்வியைப் பெற்ற மேற்கத்திய முறைக்கு பழக்கப்பட்டிருந்த மத்தியதர வர்க்கத்தினருக்கு தேசியத் தன்மையை உயிர்ப்பூட்டுவதற்கான தேவை இருக்கவில்லை. ஏகாதிபத்தியவாதிகளால் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த அரசியல் திட்டத்திலே சீர்திருத்தங்களைப் பெற்றுக் கொள்வதே அவர்களுக்குத் தேவையாயிருந்தது. அவர்கள் அரசியல் சீர்திருத்தங்களின் மூலம் அரசியலில் சம்பந்தப்படுவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்ளமுயற்சித்தனர். பிரித்தானியர்களை வெளியேற்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வது அவர்களின் நோக்கமாக இருக்கவில்லை. அதற்கமைய இருபதாம் நூற்றாண்டின் முதற்பத்தில் அவர்கள் சட்டவாக்கக் கழகத்தை விஸ்தரித்து அதில் கூடிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டங்களில் ஈடுபட்டனர். 1870 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட தாழ் நாட்டு வர்த்தகப் பயிர்ச் செய்கையாளரின் சங்கத்தின் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொண்டனர். அவ்வாறே இக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சங்கம், சிலாபச் சங்கம் என்பனவும் தேசிய இயக்கத்துடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றன.

ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து புதிய அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கைத் தலைவர்கள் மனுக்களின் மூலம் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். எச். ஜே. டீ. பெரேரா, ஜேம்ஸ் பீரிஸ் என்போர் அரசாங்கம் சம்பந்தமாக மத்தியதர வர்க்கத்தினரின் வெறுப்பை இவ்வாறு மனுக்கள் மூலம் முன்வைத்தனர். சட்டவாக்கக் கழகத்தின் அங்கத்தவர் தொகையை அதிகரிப்பதற்கு மேலதிகமாக வரையறுக்கப்பட்ட வாக்குரிமையைப்

பெற்றுக் கொள்ளுதல், நிர்வாகக் கழகத்தில் அங்கத்துவம் பெற்றுக் கொள்ளுதல் போன்ற இன்னும் சில கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

இலங்கை தேசிய இயக்கம் சம்பந்தமான முக்கியத்துவத்துக்குரிய சந்தர்ப்பமாக விமர்சகர்களால் குறிப்பிடப்படுவது, 1910 - 1920 காலகட்டமாகும். தேசிய இயக்கம் முறையான கட்டமைப்பைப் பெற்றுக் கொண்டது இக்காலத்திலாகும். நாம் மேலே உள்ள அத்தியாயத்தில் கற்றபடி 1910 இல் அரசியல் சீர்திருத்தம் ஒன்றைப் பெற்றுக் கொண்டாலும் தேசியத் தலைவர்கள் அதனால் திருப்திப்படவில்லை. எனினும் அரசியல் சீர்திருத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஒன்றுபட்டு செயற்படுவதற்கு முன்வந்தது இக்காலகட்டத்திலேயாகும். எனவே அரசியலில் இது முக்கியத்துவம் பெறுகிறது.

அவற்றின் வாயிலாக அரசியல் சீர்திருத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கான இயக்கத்தை முடுக்கிவிட்ட காரணிகளுள் 1915 சிங்கள - முஸ்லிம் கலவரமும், 1919 இல் அமைத்துக் கொள்ளப்பட்ட தேசிய சங்கமும் குறிப்பிடத்தக்கவையாகும்.

## 1915 சிங்கள - முஸ்லிம் கலவரம்.

ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக இலங்கையர்கள் ஒன்றுபட்ட இயக்கமாக உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய காரணி 1915 சிங்கள - முஸ்லிம் இனக்கலவரம் ஆகும். பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து செயற்பட்ட தேசிய மறுமலர்ச்சி இயக்கமும், அதனுடன் சம்பந்தப்பட்ட மது ஒழிப்பு இயக்கமும் மிகவும் சக்திவாய்ந்த தேசிய இயக்கங்களாக இருந்த போதிலும், அவற்றின் மூலம் ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத்தினர் நோக்காகக் கொண்டிருந்த அரசியல் சீர்திருத்தங்களில் கணிசமானவற்றைப் பெற்றுக் கொள்ள இயலவில்லை. 1915 கலவரத்திற்கு சமய சாயல் இருந்தாலும் அதற்கு அரசியல், பொருளாதாரக் காரணங்கள் பலவும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. முதலாம் உலக மகாயுத்தம் காரணமாக சாதாரண குடிமக்கள் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்தனர். சகல வியாபாரங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த முஸ்லிம் வியாபாரிகள் மீது கடுமையான விரோத மனப்பான்மை உருவாகியது. இச்சூழலில் சமய விடயமொன்றை முன்நிறுத்தி மலைநாட்டில் ஆரம்பமான இம்மோதல் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களுக்கும் பரவியது.

இதனைப் பேரரசுக்கு விரோதமான கலவரம் ஒன்றாகக் கருதி பிரித்தானிய அரசாங்கம் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்து கலவரத்தை கடுமையாக அடக்கியது. மது ஒழிப்பு இயக்கத்தினருக்கு விரோதமான செயற்பாட்டை முன்னெடுப்பதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த ஆட்சியாளர்களுக்கு இது சரியான சந்தர்ப்பமாகப்பட்டது. மது ஒழிப்பு இயக்கத்தின் தலைவர்களைக் கைது செய்து கிளர்ச்சிக்காரர்களாக அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு முனைந்தது.

1915 இல் சிங்கள - முஸ்லிம் மோதல், கம்பளைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பமானது. கம்பளைப் பள்ளி வாசல் ஒன்றிற்கு முன்னால் பெரஹரா செல்லும்போது மேள முழக்கம், நடனம், ஆடல், பாடல் என்பவற்றை தவிர்த்தல் தொடர்பான ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது. அது மீறப்பட்டமையே 1915 ஆம் ஆண்டுக் கலவரத்திற்குக் காரணமாகும். அது கொழும்பு, குருணாகலை, சப்ரகமுவ ஆகிய பிரதேசங்களுக்கும் பரவிச் சென்றது.

எப். ஆர். சேனநாயக்க, டீ. எஸ். சேனநாயக்க, சேர். டீ. பீ. ஜயதிலக, சி. படுவத்துடாவ, டீ. ஏ. ஹேவாவிதாரண, ஏ. ஈ. குணசிங்க என்போர் சிறைப்பட்டவர்களுள் உள்ளடங்குவர். வில்லியம் ஹென்றி பேதிரிஸ் உட்படச் சிலர் விசாரணையின்றி மரணதண்டனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதனால் ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து சுதந்திரமடைய வேண்டுமென்ற எண்ணம் சுதேசிகளிடையே பலமடைந்தது. அதனால் தேசிய எழுச்சி ஏற்பட்டு, ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான போராட்டம் மிகவும் பலமாக எழுச்சி அடையத் தொடங்கியது.

## இலங்கைத் தேசிய சங்கம் (1919)

மேற்கூறிய சம்பவங்களினால் தேசியத் தலைவர்களிடையே ஒற்றுமை வளரத் தொடங்கியது. பிரித்தானியரின் அநீதிகள், அடக்குமுறைகள் என்பவற்றிலிருந்து விடுபடுவதற்கு அனைத்து மக்களும் உள்ளடங்கிய தேசிய இயக்கமொன்றின் தேவையைத் தலைவர்கள் உணரத் தலைப்பட்டனர். இதன் பிரதிபலனாக இந்திய தேசிய காங்கிரஸின் செல்வாக்கிற்கு ஆட்பட்டு 1919 ஆம் ஆண்டில் இலங்கைத் தேசிய சங்கம் நிறுவப்பட்டது. இதுவரை இலங்கை மத்தியதர வர்க்கத்தின் தலைவர்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட அரசியல் போராட்ட இயக்கத்தின் முக்கியத்துவமான ஒரு பிரதிபலனாக இதனைக் குறிப்பிடலாம். சேர். பொன். அருணாசலம் இச்சபையின் முதல் தலைவரானார். இதனால் குறுகிய காலத்தினுள் சிங்கள - தமிழ் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது. இலங்கையர்களுக்குப் பொதுவான அரசியல் சீர்திருத்தக் கோரிக்கை ஒன்று தேசிய சங்கத்தால் முன்வைக்கப்பட்டது. சட்டபூர்வமாகவும், சமாதானமாகவும் உரிமைகளை வென்றெடுப்பது அவர்களின் நோக்கமாகக் காணப்பட்டது.



சேர். பொன் அருணாசலம்

1912 இல் கல்வி கற்ற இலங்கையர்களுக்காக சட்டவாக்கக் கழகத்திற்கு அங்கத்தவர் ஒருவரைத் தெரிவு செய்து கொள்வதிலோ, 1915 கலவரம் ஏற்பட்ட சந்தர்ப்பத்திலோ, தேசிய மகா சங்கம் ஆரம்பித்த போதோ எவ்வித இனபேதமுமற்று தேசியத் தலைவர்கள் ஒன்றுபட்டு செயற்பட்டனர். தேசிய சங்கத்தின் வழிகாட்டலின் கீழ் அரசியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட வேளையில் 1920, 1924, 1931 ஆகிய வருடங்களில் அரசியல் சீர்திருத்தங்கள் பலவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தது. அப்படியிருந்தும் தேசிய சங்கம் எதிர்பார்த்த இலக்கு பூரணமாக எட்டப்படாதுவிடினும் தொடர்ந்தும் சீர்திருத்தங்களைக் கோரிப் போராடியதாகத் தெரிகின்றது.

இலங்கைத் தேசிய சங்கம் இலங்கையர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து ஆரம்பிக்கப்பட்டாலும் 1921 ஆம் ஆண்டளவில் சிங்களவர் - தமிழர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அதனால் அதன் பலம் குன்றிப்போனது. சட்டவாக்கக் கழகத்தில் இடஒதுக்கீட்டில் சிங்கள - தமிழ்த் தலைவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. மேல்மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட மேலதிக அங்கத்துவம் போட்டியின்றி சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் என்று தலைவர்கள் செய்துகொண்ட உடன்பாடு மறக்கடிக்கப்பட்டமையால் தமிழ்த் தலைவர்களிடையே சிங்களத் தலைவர்கள் மீது சந்தேகமும், அவநம்பிக்கையும் ஏற்பட்டது. 1926 ஆம் ஆண்டளவில் தமிழ்த் தலைவர்கள் தேசிய சங்கத்திலிருந்து விலகிச் சென்றனர்.

பல்வேறு சங்கங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்டு இலங்கைத் தேசிய சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1928 இல் இலங்கைத் தொழிலாளர் சங்கம் எனும் பெயரில் ஏ. ஈ. குணசிங்க அவர்களின் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தொழிலாளர் சங்கமும் அதன் ஓர் அங்கமாகும். இலங்கைத் தொழிலாளர் சங்கத்தின் பிரதான கோரிக்கை சுதந்திரமாகும். அவர்கள் சர்வசன வாக்குரிமையைக் கோரிநின்ற போது தேசிய மகாசபைத் தலைவர்கள் வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை வழங்க வேண்டும் எனக் கோரி நின்றனர். தேசிய மகாசபைத் தலைமைத்துவத்தின் தீர்மானத்தை எதிர்த்து, ஏ. ஈ. குணசிங்க உள்ளிட்ட பிரிவினரும் அதிலிருந்து விலகிச் சென்றனர். 1928 ஆம் ஆண்டளவில் சிறுபான்மையினர், மலை நாட்டவர், தொழிலாளர் சங்கம் என்பன தேசிய சங்கத்திலிருந்து விலகி நின்றன. இச்சபையில் தாழ்நாட்டு வர்த்தகப் பயிர்ச் செய்கையாளர்களைக் கொண்ட தலைவர்கள் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

1931 டொனமூர் யாப்பின்படி (கெபினட்) அமைச்சரவை ஆட்சி முறை ஒன்று கிடைக்காமையால் இலங்கைத் தேசிய சங்கம் தனது கவலையைத் தெரிவித்தது. நிர்வாகக்குழு முறையையும், வாக்குரிமையையும் பெற்றுத் தந்த சீர்திருத்தம் தொடர்பாக அவர்கள் தங்கள் விருப்பமின்மையைத் தெரிவித்தனர். டொனமூர் யாப்புமுறை செயற்படத் தொடங்கிய பின்னர் இலங்கை தேசிய சங்கமும், ஏனைய அமைப்புக்களும் அரசுக் கழகத்தின்உள்ளும் புறமும் பொறுப்பு வாய்ந்த பதவிகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்டன. 1942

இல் இலங்கைத் தேசிய சங்கம் மீண்டும் அரசியல் சீர்திருத்தம் ஒன்றைக் கோரியது. அரசுக் கழகமும் சுயாதிபத்தியமுள்ள ஆணிலப்பத (டொமினியன்) அந்தஸ்தை கோரித் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

இதற்கிடையிலே இரண்டாம் உலக மகாயுத்தம் கிழக்குலக நாடுகளுக்குப் பரவத் தொடங்கியதும், குடியேற்ற நாடுகளில் அரசியல் உரிமைப் போராட்டமும் அதிகரிக்க ஆரம்பித்தது. இவற்றைக் கவனத்தில் கொண்ட பிரித்தானிய அரசாங்கம் 1943 இல் இலங்கைக்குப் பொறுப்பாட்சிமுறை ஒன்றை வழங்குவதாக வாக்குறுதியளித்தது. அதற்கமைய நியமிக்கப்பட்ட சோல்பரி குழுவினரின் ஆலோசனைகளுக்கு அமைய உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பின் கீழ் 1948 பெப்ரவரி மாதம் நான்காம் திகதி இலங்கைக்கு ஆணிலப்பத அந்தஸ்து வழங்கப்பட்டது.

- ❖ பிரித்தானியரின் கீழ் 1910, 1920, 1924, 1931 ஆகிய ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் முக்கியமான இயல்புகளைக் கற்றுக் கொண்டோம்.
- ❖ அவ்வரசியல் சீர்திருத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கான தேசிய இயக்கம் இரண்டு பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஒன்று பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பாதியில் செயற்பட்ட சமய, கலாசார, மறுமலர்ச்சி இயக்கம், மற்றது 1912 இல் உருவான மது ஒழிப்பு இயக்கம் ஆகும்.
- ❖ மறுமலர்ச்சி இயக்கத்தால் ஆற்றப்பட்ட சேவை, பிரித்தானிய ஆளுகையிலிருந்து மீட்சி பெறுவதற்காகப் பயணிக்கக் கூடிய வழியைக் காண்பித்தது.
- ❖ தேசிய இயக்கத்தின் இரண்டாவது அங்கம், ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அரசியல் சீர்திருத்தப் போராட்ட இயக்கமாகும். தேசியத் தனித்துவம் பற்றிக் கவனஞ் செலுத்தாது ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத்திற்குத் தேவைப்பட்டது இங்கிலாந்தின் மாதிரியில் இந்நாட்டை உருவாக்குவதோடு அவர்களும் அவ்வாட்சிமுறையில் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதாகும். அதனால் ஏகாதிபத்திய-வாதிகளுக்கு எதிராக வன்மையாகச் செயற்பட்ட வேறு நாடுகள் பலவற்றையும் போல இலங்கையில் தீவிரமான எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்காமையால் நாம் பெற்ற சுதந்திரம் முழுமைத்துவம் பெறாமல் போய்விட்டது.

### செயற்பாடு

1) இலங்கை தேசிய இயக்கங்களுக்குத் தலைமை தாங்கிச் செயற்பட்ட தலைவர்கள் பற்றிய விடயங்களைச் சேர்த்து சிறு நூல் ஒன்றை ஆக்குக.
2) "தேசிய சங்கத்தின்" ஆரம்பம், வளர்ச்சி, அதன் செயற்பாடு சம்பந்தமாக வரலாற்றுக் கழகத்தில் உரை ஒன்றை நிகழ்த்துக.

## கல்வி

அனுராதபுரக் காலத்தின் ஆரம்பத்திலிருந்து இலங்கையில் கல்வி முறை செயற்பட்டதாக வரலாற்று மூலங்களிலிருந்து அறிய முடிகின்றது. பன்சலை, பிரிவெனா என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை ஆதியிலிருந்தே இலங்கையில் இருந்து வந்தது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிய பின்னர் அவர்கள் அப்பிரதேசங்களில் கோவில் பற்றுப்(பரிஷ்) பாடசாலைகளை ஆரம்பித்து அவற்றின் மூலம் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 1796 இல் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியால் கரையோரப் பிரதேசம் கைப்பற்றப்பட்ட பின்னர் அவர்களது ஆட்சிக்காலத்தில் கல்வியில் கவனம் செலுத்தியதற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை.

பிரித்தானிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் முதல் ஆளுநரான பிரட்ரிக் நோர்த் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகக் கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

- ❖ கல்வி நடவடிக்கைகளுக்காக ஒல்லாந்தரின் கல்வி முறையை அடிப்படையாகக் கொண்டார்.
- ❖ கிறிஸ்தவ சமய சூழலிலான மேற்கத்தைய முறையிலான கல்வியை வழங்கத் தீர்மானித்தார்.
- ❖ அரசாங்கத்திற்குத் தேவையான எழுதுவினைஞர்களையும் கிராமத் தலைவர்களையும் பயிற்றுவிப்பதற்கும் இங்குள்ள கனவான்களின் பிள்ளைகளுக்காகவும் “கொழும்பு அக்கடமி” எனும் தாபனத்தை உருவாக்கினார்.

1812 இல் பிரௌன்றிக் ஆளுநர், இலங்கைக்கு வந்ததன் பின்னர் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. அதற்காக மிஷனரி இயக்கங்களின் உதவி கிடைக்கப் பெற்றது.

- ❖ இங்கிலாந்து மிஷனரி சங்கம்
- ❖ லண்டன் மிஷனரி சங்கம்
- ❖ பப்டிஸ்ட் இயக்கம்
- ❖ வெஸ்லியன் மெதடிஸ்ற் இயக்கம்
- ❖ அமெரிக்க மிஷனரி இயக்கம்

இவற்றின் மூலம் கல்வி நடவடிக்கைகள் பரவலடைந்தன.

❖ பப்டிஸ்ட் மிஷனரி இயக்கம் :- கொழும்பை மையமாகக் கொண்டு கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

❖ வெஸ்லியன் மெதடிஸ்ற் இயக்கம் :- வடக்கு, தெற்கு பிரதேசங்களில் செயற்பட்டது.

❖ சேர்ச் மிஷனரி இயக்கம் :- கொழும்பு, காலி, கற்பிட்டி, மன்னார், கண்டி ஆகிய பிரதேசங்களை மையமாகக் கொண்டு இயங்கியது.

❖ அமெரிக்கன் மிஷனரி இயக்கம் :- வட பிரதேசத்தில் சிறப்பாகச் செயற்பட்டுக் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டது.

1833 இல் கோல்புறூக் ஆணைக்குழுவினர் கல்வி தொடர்பான ஆலோசனைகள் பலவற்றை முன்வைத்தனர்.

❖ ஆங்கில மொழிப் பாடசாலைகளை ஏற்படுத்தல்.

❖ ஆங்கில மொழியைக் கட்டாயமாக்குதல்.

❖ ஆங்கிலத்தைக் கற்பிப்பதற்கென கொழும்பில் வித்தியாலயம் ஒன்றை அமைத்தல்.

❖ கிறிஸ்தவ மிஷனரிக் கல்விக்கு உதவி, ஒத்துழைப்பை வழங்குதல். இது தொடர்பாக ''மிஷனரி பாடசாலைகள்'' உள்ள பிரதேசங்களில் அரசாங்கப் பாடசாலைகளை ஏற்படுத்தாதுவிடல்.

ஆங்கிலேயர்கள் மிஷனரிக் கல்விக்குக் கூடிய சலுகைகளை வழங்கியும் சுயமொழிகளில் கவனம் செலுத்தாமையால் பிற்காலத்தில் அவை மிகவும் பலவீனப்பட்டுப் போயின.

1841 இல் மெக்கன்ஸி ஆளுநரின் காலத்தில் கல்விப் புலத்தில் முக்கியமான சீர்திருத்தங்கள் பல மேற்கொள்ளப்பட்டன.

கோல்புறூக் ஆலோசனைகளின் பிரதிபலனாக சுயமொழிக்கல்வி வீழ்ச்சியுற்றது. பாடசாலை ஆணைக்குழுவும், மத்திய பாடசாலை ஆணைக் குழுவும் ஏற்படுத்தப்பட்டு கல்வியை மேம்பாடடையச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், கல்வி வளர்ச்சி அடைவதற்குப் பதிலாக படிப்படியாக வீழ்ச்சியை நோக்கியே சென்றது. இதனால் கல்விச் செயற்பாடுகளை திருத்தி அமைக்குமாறு கோரி 1865 இல் தேசிய கல்வியாளர்கள் போராட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கினர். இந்நாட்டின் கல்வியைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று சட்டவாக்கக் கழகத்தில் உத்தியோக சார்பற்ற அங்கத்தவர்களான ஜேம்ஸ் அல்விஸ், முத்துக் குமாரசுவாமி ஆகியோர் ஆலோசனைகளை முன்வைத்தனர். இதன்படி 1865 இல் ஆர். எப். மோர்கன் அவர்களின் தலைமையில் கல்வி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இது ''மோர்கன் குழு'' எனும் பெயரால் அழைக்கப்பட்டது.

**1865 இல் மோர்கன் குழு முன்வைத்த ஆலோசனைகளாவன :**

- ❖ கல்வி நிர்வாகத்திற்காக பகிரங்கக் கற்பித்தல் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டமை.
- ❖ கல்வி நடவடிக்கைகளின் நிர்வாகம் அரசாங்கத்தின் பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்டமை.
- ❖ தாய்மொழியில் ஆரம்பக் கல்வியை வழங்குதல். இடைநிலை, உயர் நிலைக் கல்வியை ஆங்கில மொழியில் கற்பித்தலை மேற்கொள்ளுதல்.
- ❖ பெண் கல்வியை மேம்படுத்தல். பெண்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாமை. பாடசாலைக்கு சமுகமளிக்கும் பெண்களுக்குப் பரிசளித்தல்.
- ❖ தனியார் பாடசாலைகளுக்கு உதவி வழங்கல்.
- ❖ மோர்கன் அறிக்கையில் பாடசாலைகளுக்கு பல வகைப்படுத்தப்பட்ட ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. தொழிற் பாடசாலை, மும்மொழிப் பாடசாலை, மத்திய பாடசாலை, கொழும்பு அக்கடமி, ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள்.

1911இல் நியமிக்கப்பட்ட குழுவினரால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைவாக 1921இல் சாமஸ் ஆளுநரால் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்பட்டது. லண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இது செயற்பட்டமையால் ஆங்கிலக் கல்வி மேலும் வளர்ச்சியுற்றது.

1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் கல்விச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நாட்டு மக்களின் தேசிய உணர்வுகளுக்குப் பொருத்தமான விதத்திலும், தேசத்தின் தேவைகளுக்குப் பொருந்தும் விதத்திலும் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பது உணரப்பட்டது. இவற்றுக்கமைய கல்விப் பொறுப்பை ஏற்றிருந்த நிர்வாகக்குழுத் தலைவரான சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்களின் தலைமையில் இந்நாட்டுக் கல்விச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதற்கமைவாக 1946 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இலவசக் கல்விச் சட்டம் இயற்றப்பட்டு இந்நாட்டு மக்களுக்கு சுதந்திரமான கல்விக்கான பாதை திறக்கப்பட்டது.



சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா
படம் - 2.25

சீ.டபிள்யூ. கன்னங்கரா அவர்கள் இலவசக்கல்வியின் தந்தை என அழைக்ககப்படுகின்றார்.

**அச்சீர்திருத்தத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட கல்வி ஆலோசனைகளாவன:**

- தேசிய தன்மையுடனான கல்வியை வழங்குதல்.
- கட்டாயக் கல்வி முறை
- பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசமாகக் கல்வி வழங்குதல்.
- கிராமியக் கல்வியை மேம்படுத்துவதற்கு ''ஹந்தெஸ்ஸ யோசனைகளை'' அமுலுக்குக் கொண்டுவரல்.
- பாடசாலைகளுக்கு மதிய உணவை வழங்குதல்.
- தேசிய பரீட்சை முறை ஒன்றை ஆரம்பித்தல்.
- இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தைக் கற்பித்தல்.
- பாடசாலையில் சமயத்தைக் கட்டாய பாடமாகப் போதித்தல்.
- ஆசிரியர் பயிற்சிக்காக விசேட அமைப்புக்களை உருவாக்குதல்.
- ஆசிரியர்களின் சம்பளத்தை திணைக்களத்தால் நேரடியாக வழங்குவதற்கான முறை ஒன்றை ஆரம்பித்தல்.
- மத்திய பாடசாலைகளை ஆரம்பித்தல்.
- கிராமிய மாணவர்களில் திறமை மிக்க ஏழைப்பிள்ளைகளுக்கு உயர் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஐந்தாம் தரத்தில் உபகாரநிதி வழங்கும் முறையை ஆரம்பித்தல்.

இலவசக்கல்வி என்பது இலங்கையருக்கு கிடைக்கப்பெற்ற பெரும் வரப்பிரசாதமாகும். இதனால் கிராமப் புறங்களிலும் பாடசாலைகள் உருவானதுடன் அதனைத் தொடர்ந்து மகா வித்தியாலயங்களிலிருந்து பெருந்தொகையான கல்விமான்கள் வெளிப்பட்டனர்.

பாடசாலைக் காலத்தை முடித்து வெளியேறும் மாணவர்களுக்கு உயர் கல்வியோ, தொழிற்கல்வியோ பெற்று நாட்டின் தேவைகளுக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்புக்களை வழங்குதல் என்பன இவ்வாலோசனைகளின் நோக்கமாக இருந்தது.

**செயற்பாடு :**

1) 1812 - 1931 வரை பிரித்தானிய ஆளுகையின் கீழ் கல்வி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பட்டியல் படுத்துக.

2) இலவசக் கல்வியின் தந்தை எனப் புகழப்படும் சி.டப்ளியூ.டபிள்யூ கன்னங்கர அவர்களின் கல்விப் பணியை விளக்கி, பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று வரைக.

## பிரித்தானிய நிர்வாகத்தினூடே.......

- நீண்ட காலமாகக் கவனிக்கப்படாதிருந்த பழைய நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைப்பதன் அவசியம் பிரித்தானியரால் கண்டறியப்பட்டு, ஆளுநர்கள் சிலரால் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை வெற்றியளிக்கவில்லை.
- மிஷனரிக் கல்வி முறையின் மூலம் ஆங்கிலம் கற்பிக்கப்பட்டமை.
- சுயமொழிக் கல்வியில் கவனம் செலுத்தப்படாமை.
- கல்வி கட்டாயமானதாக்கப்படல்.
- தபாற்சேவை, தபாற் தந்தி சேவை, வங்கிச் சேவை போன்ற நவீன தொடர்பாடல் முறைகளும், பணக் கொடுக்கல் வாங்கலும் ஆரம்பமாதல்.
- பெருந்தெருக்களும், புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டமை.
- துறைமுகங்களை அபிவிருத்தியடையச் செய்தமை.
- ஜீவனோபாயப் பயிர்ச் செய்கையைப் புறக்கணித்து வர்த்தகப் பயிர்ச் செய்கை முறைமையை பிரதான வருமான மார்க்கமாக்கியமை.
- ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார முறை உருவாக்கப்பட்டமை.
- வெளிநாட்டுத் தொடர்புகளுக்கு இலங்கை திறந்து விடப்பட்டமை.
- இந்நாட்டுப் பொருளாதாரத்தை உலகச் சந்தையில் தங்கியிருக்கச் செய்தமை.
- நாட்டு மக்களின் உடைமையாக இருந்த நிலத்தை வெளிநாட்டு முயற்சியாளருக்குப் பெற்றுக் கொடுத்தமை.
- இந்நாட்டில் ஓரங்குல நிலத்தைத்தானும் சொந்தமாக வைத்திராத ஏழை எளியவர்களை உருவாக்கியமை.
- நாட்டின் வளங்களையும், சூழலுக்கும் தேவைக்கும் ஏற்ற முறையில் இருபது நூற்றாண்டுகளுக்கு மேலாகக் கட்டியெழுப்பப்பட்ட சுதந்திர அரசியல், சமூக, பொருளாதார, கலாசார பண்புகளைக் கொண்டிருந்த தேசியப் பாரம்பரியத்தையும் அழித்தொழித்தமை. இதனால் சுதந்திரம் பெற்ற பின்னரும் கூட தீர்த்துக்கொள்ள முடியாத பாரதூரமான பிரச்சினைகளை விட்டுச் சென்றமை.

- ❖ வெளிநாட்டு மோகம் கொண்ட, அடிமை மனப்பான்மை கொண்ட மேற்கத்திய பாணியில் உருவாக்கப்பட்ட இந்நாட்டுக் குடிகளை உருவாக்கியமை.
- ❖ பணப்பரிமாற்றத்தை அறிமுகப்படுத்தியதுடன் பணத்திற்கு முதலிடம் வழங்கும் சமூகத்தை உருவாக்கியமை.
- ❖ எப்படியாவது பணத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்கு போட்டியிடும் பண்பு வளர்ச்சியடைந்தமை.
- ❖ இந்நாட்டுக்குப் பாரம்பரியமாக கிடைக்கப் பெற்ற அந்நியோந்நியத் தொடர்புகள் நிறைந்த சமாதான, சகவாழ்வுப் பழக்கவழக்கங்களைக் கொண்ட ஒழுக்கம் நிறைந்த சமூக முறைமை முழுமையாக அழிந்து போனமை.
- ❖ எல்லாவிதத்திலும் நாட்டின் எதிர்காலத்தைப் பாழடித்து நாட்டை வங்குரோத்து நிலைக்குள்ளாக்குவதற்கு வழிவகுத்து, அதனால் சுதந்திரம் பெற்ற பின்னரும் வெளிநாட்டுச் சக்திகளுக்கு ஆட்பட்டு இருக்கும் நிர்ப்பந்த நிலையை உருவாக்கியமை.

**சுருக்கம்.**

- ❖ 1796 இல் பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை தமதாக்கிக் கொண்ட பின்னர் மேற்கொண்ட பொருளாதாரக் கொள்கைகள்.
- ❖ பாரம்பரியமாக நிலவி வந்த இராஜகாரியமுறை படிப்படியாக ஒழிக்கப்பட்டமை.
- ❖ பெருந்தோட்டச் செய்கையின் ஆரம்பமும் அதன் பரவலும்.
- ❖ தேச மக்கள் நவீனத்துவத்திற்கும் மேற்கத்தியமயமாக்கத்திற்கும் பழக்கப்படல்.
- ❖ மத்தியதர வர்த்தகத்தினரின் வளர்ச்சியும் அவர்களின் நடவடிக்கைகளும்.
- ❖ தேசிய இயக்கத்தின் தன்மை.
- ❖ பிரித்தானியரின் கீழ் கல்வி நடவடிக்கைகள்.
- ❖ சமய, கலாசார எழுச்சி.